விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 23 புதன்கிழமை (08.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 263

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 500/= மட்டுமே

வவுனியாவில் ஒரே நாளில்

## 16 பேர் கொரோனாவால் மரணம்

178 பேருக்கு தொற்று உறுதி

(வவுனியா)

வவுனியாவில் ஒரே நாளில் கொரோனாவால் 16 பேர் உயிரிழந்ததுடன் 178 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கோவிட் தொற்றுக் காரணமாக சிகிச்சை பெற்றுவந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 16 பேர் கோவிட் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

நாள் ஒன்றில் 15

கொரோனாவின் கொடூரம்

## 4 சிசுக்களையும் பறிகொடுத்த தாய்

(கொழும்பு)

கொரோனாத்தொற்றினால் பாதிக்கப்பட்ட கர்ப்பவதித் தாய்க்கு பிறந்த நான்கு குழந்தைகள், அம்பாறை பொது மருத்துவ 15

தமிழரசுக் கட்சிக்குள் புது அணி

# 9 பேரின் கையொப்பத்துடன் ஐ.நாவுக்கு தனிக் கடிதம்

## தமிழ்த் தேசிய பரப்பிலிருந்து அனுப்பிய 4ஆவது கடிதம்

(கொழும்பு)

**இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள்ளிலிருந்து இரண்டாவது கடிதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இம்முறை மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்த் தேசியப் பரப்பிலிருந்து அனுப்பப்பட்ட 4ஆவது கடிதம் இதுவாகும்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை கலந்து பேசி நேற்று முன்தினம் இரா.சம்பந்தனின் கையொப்பத்துடன் மட்டும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 9 பிரமுகர்களின் கையொப்பத்துடன் கடிதம் அனுப் 15

நாட்டில் மேலும்

## 184 கோவிட் மரணங்கள்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 184 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரி 15

கோவிட் தொற்றால்

## 40 கர்ப்பவதிகள் உயிரிழப்பு

(கொழும்பு)

கோவிட் - 19 தொற்று உறுதியான 40 கர்ப்பவதித் தாய்மார்கள் இதுவரை உயிரிழந்துள்ளதாக சுகாதாரத் துறை உறுதிப்படுத்தியுள்ளது. 15

## வெளிப்படுத்தப்படாத சொத்துக்களை சட்டபூர்வமாக்குவதற்கு அனுமதி

பாராளுமன்றில் நிறைவேறியது சட்டமூலம்

(கொழும்பு)

வெளிப்படுத்தப்படாத சொத்துக்களை சட்டபூர்வமாக்குவதற்கு அனுமதிவழங்கும் நிதி சட்டமூலம் திருத்தங்களுடன் நேற்று பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

குறித்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 134 15

வட மாகாணத்தில்

## ஒரே நாளில் 31 பேரை பலியெடுத்த கொரோனா

| | |
|---|---|
| வவுனியா - 16 | யாழ்ப்பாணம் - 12 |
| முல்லை. - 02 | கிளிநொச்சி - 01 |

தேசியப் பட்டியல் ஊடாக

## சபைக்கு வருகின்றார் யோஷித்த ராஜபக்ஷ



(கொழும்பு)

நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கிஆளுநராக நியமிக்கப்படவுள்ள நிலையில் அவரின் 15

## ஊரடங்கை 13ஆம் திகதியுடன் நிறைவுக்கு கொண்டுவருவது தொடர்பில் அரசு ஆராய்வு

கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை 13ஆம் திகதியுடன் நிறைவுக்கு கொண்டுவருவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருவதாக கொழும்பு ஊடகங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

நாட்டில் ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில் பொருளாதாரம் மிக மோசமான பாதிப்பைச் சந்தித் 15


## 12 கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் பேர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று கொரோனாத் தொற்றினால் 12 பேர் உயிரிழந்துள்ளதாக மருத்துவ அறிக்கைகள் ஊடாகத் தெரிவிக்கப்பட்டுள் 15

## நாட்டின் பிரபல தலைவர் இரு மாதங்களில் உயிரிழப்பார்

கோத்தமி பிக்குணி ஆரூடம்



(கொழும்பு)

இலங்கையில் இன்னும் இரண்டு மாதங்களில் நாட்டை நேசித்த பிரபல தலைவர் ஒருவர் உயிரிழப்பார் என பல்லேகல கோதமி விகாரையின் விகாராதிபதி 15

தீக்காயங்களுக்குள்ளான

## குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப் 15

# அதிபர் - ஆசிரியர்களின் சம்பள உயர்வினை ஒரே சந்தர்ப்பத்தில் வழங்க முடியாது

## அமைச்சர் ரமேஷ் பத்திரண

(கொழும்பு)

அதிபர் - ஆசிரியர்களின் சம்பள உயர்வினை நிதி நெருக்கடிகளின் காரணமாக ஒரே சந்தர்ப்பத்தில் வழங்க முடியாது.

எனவே 3 கட்டங்களாக அதனை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இது தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும். அரசாங்கத்தின் ஸ்திரமான போக்குகள் 2022 வரவு - செலவு திட்டத்தில் உள்ளடக்கப்படும்.

அத்தோடு ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள இடைக்கால கொடுப்பனவு 5000 ரூபாய் இம்மாத சம்பளத்துடன் வழங்கப்படக் கூடும் என்றார். (ம-03)

# யாழில் நீண்ட நாட்களாக வழிப்பறியில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதிச் சந்திக்கு அண்மையில் அரசடி வீதியில் சென்றவரை வழிமறித்து மிரட்டி பணம் பறித்துச் சென்றவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சிசிரிவி கமராவின் துணையுடன் குறித்த நபர்களின் மோட்டார் சைக்கிள் அடையாளம் காணப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் பிறவுண் வீதிக்கு அண்மித்த பகுதி, தொடருந்துப் பாதைக்கு அண்மையாகச் செல்லும் வெளி நாட்டுப் பிள்ளையார் கோவிலடி, நல்லூரின் செட்டித்தெருச் சந்திக்கு அண்மித்த பகுதிகளில் மிக நீண்ட நாட்களாக வழிப்பறிக் கொள்ளைகள் நடைபெற்றுவருகின்றன.

வீதியில் செல்லும் இளைஞர்களை வழிமறித்து, அவர்களிடம் தமது (திருடர்கள்) சகோதரிகளின் ஒளிப்படங்கள் தொலைபேசியில் உள்ளதாக மிரட்டி அவற்றைப் பார்க்கத் தருமாறு பெற்றுக்கொண்டு தப்பி ஓடுவது, தனியாகச் செல்லும் இளம் பெண்களை வழிமறித்து அவர்களுடைய தொலைபேசிகளைப் பறித்துக்கொண்டு ஓடுவது, பணம் பறித்துச் செல்வது என்று தொடர்ந்தும் இவ்வாறான வழிப்பறிச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்ற நிலையில் தற்போது ஒரு கைதுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# யாழ். போதனா பரிசோதனையில் வடக்கில் 124 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் 57 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 124 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 282 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 124 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

**வவுனியா மாவட்டத்தில் 57 பேர்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 44 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 06 பேர், செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் 06 பேர், நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்.

**யாழ். மாவட்டத்தில் 25 பேர்**

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 09 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் 08 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 04 பேர், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர், புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையில் ஒருவர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 08 பேர்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 21 பேர்**

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 11 பேர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 07 பேர், ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் 03 பேர்.

மேலும் பலாலி விமானப் படை முகாமில் 05 பேர், காங்கேசன்துறை கடற்படை முகாமில் 03 பேர், பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவர், மன்னார் கடற்படை முகாமில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)

# நாட்டில் நேற்றும் 2,960 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 2,960 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 471, 859 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,769 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 388, 278 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)






# வவுனியா விபத்தில் உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் கடற்படைப் பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் 28 வயதான இளைஞர் ஒருவர் நேற்று முன் தினம் மரணமடைந்திருந்தார்.

குறித்த இளைஞனின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

அதன் முடிவுகளின் பிரகாரம் அவருக்கு கொரோனாத் தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அவரது சடலத்தினை எரியூட்டுவதற்கான செயற்பாட்டினை சுகாதாரத் தரப்பினர் முன்னெடுத்து வருகின்றனர். (ம-03,299)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532










# எந்த தடுப்பூசி விரைவாக கிடைக்கிறதோ அச்சமின்றி அதைப் பெற்றுக் கொள்ளுங்கள்

## வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்

(குப்பிழான்)

**எந்த தடுப்பூசி விரைவாக கிடைக்கிறதோ அதனை பெற்றுக் கொள்ளுங்கள் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

சினோபார்ம் தடுப்பூசிதொடர்பில் பொது மக்களிடையே காணப்படும் ஐயப்பாடு தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் ஐந்து வகையான தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுகின்றன

இதுவரை நேற்று நாட்டில் 10 மில்லியன் மக்களுக்கு சினோபார்ம் தடுப்பூசி தான் வழங்கப்பட்டுள்ளது.எனவே தடுப்பூசிகளை எடுத்துக் கொண்டால் தடுப்பூசிகளிடையே வேறுபாடுகள் காணப்படாது

ஆனால் நாங்கள் இந்த தடுப்பூசிதான் போடுவோம் என பார்த்துக் கொண்டிருக்காது எந்தத் தடுப்பூசி எமக்கு விரைவாக கிடைக்கின்றதோ அந்த தடுப்பூசியினை நாங்கள் பெற்றுக் கொள்ள முன்வரவேண்டும்

சினோபார்ம் தடுப்பூசி பற்றி பொது மக்கள் மத்தியில் ஒரு சந்தேகம் நிலவுகின்றது இது சீனத் தயாரிப்பு, எந்தளவுக்கு இது நோயை குறைக்கும் என்ற ஐயம் காணப்படுகிறது

இது சீனாவில் மட்டுமல்லாது பல நாடுகளில் இந்த ஊசி பயன்படுத்தப்படுகின்றது அதாவது பல நாடுகளில் சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டதன் மூலம் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது

எனவே இந்த தடுப்பூசி தொடர்பில் பொது மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவே இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் சினோபார்ம் தடுப்பூசி மூலம் இறப்புகளையும் நோய் தாக்கத்தினையும் குறைக்க முடியும் என்பது ஆய்வுகள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-18)

## ஆசிரியர் கலாசாலைகளின் ஆண்டு இறுதிப் பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

2020 மற்றும் 2021 ஆசிரியர் கலாசாலைகளின் இறுதி ஆண்டுப் பரீட்சை, கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனாத் தொற்று நிலையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் கலாசாலைகளின் இறுதி ஆண்டுப் பரீட்சையை எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதிவரை நடத்துவதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



## பதவியிலிருந்து விலகுகிறார் அஜித் நிவாட் கப்ரால்?

(கொழும்பு)

நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் அமைச்சுப் பதவியில் இருந்து விலகவுள்ளதுடன், பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.மத்திய வங்கியின் ஆளுநராக அவர் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாகவும் அதற்காகவே அவர் அமைச்சர் மற்றும் எம்.பி பதவிகளில் இருந்து விலகவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, தற்போது மத்திய வங்கியின் ஆளுநராக இருக்கும் பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஸ்மன் சர்வதேச நாணய நிதியத்தின் உயர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5)


## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 03 . 1965



மறைவு 04 . 09 . 2021

### ஸ்ரீமதி ஜெயந்தி சோமதேவகுருக்கள்

யாழ்ப்பாணம் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி ஜெயந்தி சோமதேவகுருக்கள் கடந்த (04.09.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்க ஐயர் மற்றும் ஸ்ரீமதி தேவசேனா தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற சாம்பசதாசிவ குருக்கள் மற்றும் கௌரி அம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும், நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ சோமதேவகுருக்களின் அன்பு மனைவியும், வரப்பிரதன், சிவஸ்ரீ சிவஜெயன் சிவாச்சாரியார், நிதர்ஷனன், சிந்துகேயன், மனுப்பிரியா,சாருகேஷினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசவாணியின் அன்பு மாமியும், ஹரிசாஹித்தியனின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.09.2021) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிதர்சனன் -077 5339605
சிந்துகேயன்-077 4435441

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 07 - 1938



இறப்பு 02 - 09 - 2021

### அமரர். சின்னையா சிவபாதம்

தாவடி வடக்கு தாவடியினை பிறப்பிடமாகவும் துணைவி வட்டுக் கோட்டை, கோண்டாவில் மேற்கை வதிவிடமாக கொண்ட சின்னையா சிவபாதம் 02.09.2021 வியாழக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் அமரர் சின்னையா இராசம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், அமரர் சுப்பிரமணியம் மங்கையர்க்கரசி தம்பதிகளின் மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், சிவகரனின் பாசமிகு தந்தையும், சிறிகலாவின் அன்புமிகு மாமனாரும். கனிஸ்கா,தியானிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03.09.2021 வெள்ளிக்கிழமை காலை வீட்டில் நடைபெற்று அவரின் பூதவுடல் காலை 10 மணியளவில் தாவடி இந்து பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் வறிவித்தலை உற்றார்,உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(7865)

"இந்திராபதி"
K.K.S றோட்,
கோண்டாவில் மேற்கு

தகவல்
சிவபாதம் சிவகரன்
021 221 6286

## நான்காவது டெஸ்ட்

# இந்தியாவிடம் சரணடைந்தது இங்கிலாந்து

இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில், இந்திய அணி 157 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 2-1 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை பெற்றுள்ளது.

கடந்த 2ஆம் திகதி கெனிங்டன்- ஓவல் மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதன்போது முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்



கெட் அணி முதல் இன்னிங்ஸிற்காக 191 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி, 290 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனையடுத்து 99 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை தொடர்ந்த இந்தியக் கிரிக்கெட் அணி, 466 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அத்துடன் இங்கிலாந்து அணிக்கு 368 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இதனைத்தொடர்ந்து 368 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 210 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்திய அணி 157 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ஹசீப் ஹமீட் 63 ஓட்டங்களையும் ரொறிபர்ன்ஸ் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், உமேஷ் யாதவ் 3 விக்கெட்டுகளையும் பும்ரா, ஜடேஜா மற்றும் தாகூர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சதம் விளாசிய இந்தியக் கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரோஹித் சர்மா தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# 50 ஆண்டுகளுக்குப்பின் ஓவல் டெஸ்டில் இந்தியா அபார வெற்றி- மோடி பாராட்டு



இங்கிலாந்து அணிக்கு எதிராக 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஓவல் மைதானத்தில் இந்தியா வரலாற்று வெற்றியை ருசித்துள்ளது.

இந்தியா- இங்கிலாந்து இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டிலண்டன்ஓவல்மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்திய அணி 157 ரன்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஓவல் மைதானத்தில் இந்தியா வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ளது.

இந்திய அணியின் வெற்றிக்குப் பாராட்டு தெரிவித்து பிரதமர் மோடி டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (4-6)

## புள்ளிப்பட்டியலில் இந்தியா முதலிடம்

ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் முதலிடம் பிடித்து இந்திய அணி அசத்தியுள்ளது.

இங்கிலாந்து அணிக்கு எதிரான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றதையடுத்தே இந்த உச்சத்தை இந்தியா தொட்டுள்ளது.

ஓவல் மைதானத்தில் நடந்த 4ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 157 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மொத்தமாக 4 போட்டிகளில் 2 வெற்றிகளை பெற்றுள்ள நிலையில், ஒருபோட்டி டிரா ஆனது.

இதன் மூலம் இந்திய அணி 54.17 சதவீத வெற்றி விகிதம் மற்றும் 26 புள்ளிகளுடன், பாகிஸ்தானை பின்னுக்கு தள்ளி ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளி பட்டியலில் முதலிடத்தை பிடித்துள்ளது. (4-6)

# பும்ரா ஒரு 'பீஸ்ட்' சேவாக் புகழாரம்



இந்திய அணியின் முன்னாள் அதிரடி பட்ஸ்மேன் வீரேந்திர சேவாக், ஜஸ்ப்ரீத் பும்ராவை வெகுவாக பாராட்டியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்டில் பும்ராவின் பந்துவீச்சு அபாரமாக இருந்த நிலையில், சேவாக் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி லண்டனின் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்து முடிந்தது.

இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிக் கொண்டிருந்தபோது, ஓல்லி போப்பின் விக்கெட்டை பும்ரா கைப்பற்றினார்.

இது டெஸ்ட் அரங்கில் அவர் கைப்பற்றும் 100 ஆவது விக்கெட் ஆகும்.

மேலும், 24 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள பும்ரா அதிவேகமாக 100 விக்கெட் வீழ்த்திய இந்திய பந்துவீச்சாளர் என்ற புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

இதுகுறித்து, முன்னாள் இந்திய வீரர் வீரேந்திர சேவாக் டுவிட் ஒன்றைப் பதிவு செய்திருந்தார். அதில், "இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் பும்ரா அனைத்து வித போட்டிகளிலும் சிறப்பாக பந்து வீசுகிறார். பும்ரா ஒரு பீஸ்ட்" என்று புகழ்ந்துள்ளார்.

மேலும், இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் மைக்கேல் வாகன், "பும்ராவின் பந்துவீச்சு உண்மையிலே அபாரமானது தான். டெஸ்ட் கிரிக்கெட் பந்துவீச்சின் பெஸ்ட் இது" என்று பாராட்டி டுவிட்செய்துள்ளார். (4-6)

## அமெரிக்க ஓபன் டென்னிஸ்

# சபலென்கா, கிரெஜ்சிகோவா காலிறுதிக்குள்





கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் நான்காவது சுற்றில் நம்பர் 2 வீராங்கனையான பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த அரினா சபலென்கா, பெல்ஜியத்தின் எலைஸ் மெர்டன்சுடன் மோதினார்.

இதில் சபலென்கா 6-4, 6-1 என்ற நேர் செட்களில் எளிதில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

இதேபோல், செக் குடியரசைச் சேர்ந்த பார்போரா கிரெஜ்சிகோவா, ஸ்பெயினைச் சேர்ந்த கார்பைன் முகுருசாவுடன் மோதினார். இதில் கிரெஜ்சிகோவா அபாரமாக விளையாடி 6-3, 7-6 என்ற நேர்செட்களில்வென்று காலிறுதிக்கு முன்னேற்றம் கண்டார். (4-6)

# வெறுப்பாக உள்ளது

## தோல்வி குறித்து ரூட்

இங்கிலாந்து - இந்தியா இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி ஓவலில் நடந்த நிலையில் இந்தியா அபார வெற்றி பெற்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-1 என்று முன்னிலை பெற்றது.

தோல்விக்கு பின்னர் பேசிய இங்கிலாந்து கப்டன் ஜோ ரூட், உண்மையில் வெறுப்பாகவே உள்ளது. வெற்றி பெற வாய்ப்புள்ளதாகவே நினைத்தோம். ஆனால் இந்தியாவுக்கு பாராட்டுக்கள். பந்தை ரிவர்ஸ் ஸ்விங் செய்தனர், இதுதான் திருப்பு முனை.

முதல் இன்னிங்ஸ் முன்னிலையிலிருந்து வெற்றி பெற்றிருக்க வேண்டும். வாய்ப்புகளை உலகத்தரம் வாய்ந்த வீரர்களுக்கு எதிராக ஆடும்



போது பயன்படுத்த வேண்டும். ரிவர்ஸ் ஸ்விங்கை இன்னும் கொஞ்சம் சிறப்பாகக் கையாண்டிருக்க வேண்டும். எதார்த்த உணர்வுடன் ஆட வேண்டும், உண்மை இது தான், இது தான் தோல்விக்கு காரணம் என தெரிவித்தார். (4-6)

## இராசிபலன்

08.09.2021
ஆவணி 23, புதன்கிழமை
பிரதமை காலை 6.05 மணிவரை
துதியை பின்னிரவு 4.35 மணிவரை
உத்தரம் முன்னிரவு 6.21 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சந்திராஷ்டமம்: சதயம், பூரட்டாதி
சர்வதேச எழுத்தறிவு இலக்கிய தினம் வளவன்

**மேஷம்** — மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்** — பிள்ளைகளின் தேவை அறிந்து பூர்த்தி செய்வீர்கள், மாற்றினத்தவரின் ஒத்துழைப்பு கிடைக்கும், மனமகிழ்ச்சியுடன் செயற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவம் உண்டு.

**மிதுனம்** — யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** — குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** — அமைதி வந்து சேர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** — நடப்பது எல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுப காரிய செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** — எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், புகழ் பெற்றவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு** — குடும்ப ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அந்நியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மகரம்** — குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனை தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்** — குறைவாக பேசினாலும் குறைகூறாமல் இருப்பது நல்லது, குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**மீனம்** — நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

உலக வாழ்க்கை ஒரு தொடர் அன்பு ஓட்டம்

# சோடா தவிர்ந்த நீர் ஆகாரங்களை அதிகளவு உட்கொள்ளுங்கள்

## வடமாகாண தொற்று நோயியல் நிபுணர்

(முறிகண்டி)

**ஆபத்து கூடிய 60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் தொற்றா நோய்கள் உடையவர்களிடத்தில் இந்த தடுப்பூசி அடைவு மட்டத்தை கண்டால் மாத்திரமே இறப்பை உடனடியாக குறைக்கக் கூடியதாக இருக்கும் என வடமாகாண தொற்று நோயியல் நிபுணர் சிவகணேஸ் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வடமாகாணத்தை பொறுத்த வரையில் ஆரம்ப காலங்களில் கொரோனா நோயானது கட்டுப்பாட்டுக்குள் காணப்பட்ட பொழுதும், அண்மைய இரண்டு மாதங்களில் நோய்த்தாக்கம் மிக அதிகமாக காணப்படுகின்றது.

பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பொழுதும் ,பொதுமக்களின் சில நடவடிக்கைகள் காரணமாக தடுப்பு நடவடிக்கைகளின் இயலுமை குறைவாக உள்ளது.

உலகளாவிய ரீதியில் ஆரம்ப கால கட்டங்களில் 70 வீதமான மக்களிற்கு தடுப்பூசியை பெற்றுக்கொள்ளும்பொழுது பாதுகாப்பு தன்மை அதிகம் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், தற்பொழுது டெல்டா போன்ற திரிவுகள் காணப்படுகின்ற காரணத்தினால் அந்த எதிர்பார்க்கும் அடைவுமட்டம் அதிகமாக காணப்பட வேண்டும். அதிலும் ஆபத்து கூடிய 60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் தொற்றா நோய்கள் உடையவர்களிடத்தில் இந்த தடுப்பூசி அடைவு மட்டத்தை கண்டால் மாத்திரமே இறப்பை உடனடியாக குறைக்கக்கூடியதாக இருக்கும். எமது உடலின் பொதுவான பாதுகாப்பு அதிகரிக்கப்படும் பட்சத்தில் தான் புதிய புதிய திரிவுகள் குறைக்கப்பட்டு அதிலிருந்து ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து பாதுகாக்கக்கூடியதாக இருக்கும்.

எனவே புரத சத்துக்கள் என குறிப்பிடும் பொழுது மீன், முட்டை, கடலை வகைகள், பயறு, அவரை வகை உணவுகள், அதேபோன்று மருந்து தெளிக்கப்படாத கீரை வகைகள், பல்வேறு வகையான பழங்களையும் உண்ண வேண்டும். பனம்பழம் கூட எமது பாதுகாப்பு தொடர்பான அம்சங்களை கொண்டது.

இந்த காலப்பகுதியில் விளைகின்ற நெல்லிக்காய் மற்றும் பச்சையாய் உண்ணக்கூடிய மரக்கறிகள் போன்றவற்றை போதிய அளவு உள்ளெடுக்க வேண்டும். சோடா தவிர்ந்த ஏனைய நீர் ஆகாரங்களை உட்கொள்வதன் ஊடாக இந்த தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்கலாம். இதேவேளை எமது அரசாங்கமும், உலக சுகாதார நிறுவனமும் அறிவுறுத்தியதன் பிரகாரம், போதிய அளவு ஆள் இடைவெளியை பேணுதல், முககவசம் அணிதல் மற்றும் கைகளை அடிக்கடி கழுவுதல் மூலமும் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம்.

தற்பொழுது அரசாங்கம் முடக்கத்தை அறிவித்தாலும் எமது மக்கள் ஆரம்ப கால நினைவுகளை மையமாக வைத்து உள்ளூருக்குள் நடமாடுவது அதிகமாக உள்ளது. அதிலும் இந்த முடக்க காலத்திலும் நிகழ்வுகளை வீடுகளில் செய்வது அவர்களின் வீரதீர செயல் என கருதுவது போல் தெரிகின்றது. இயலுமானவரை அவ்வாறான விடயங்களை பிற்போட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (7-4-6-100-316)

# 45 ஆயிரம் தொன் நெல் மூடைகளை பதுக்கி வைத்திருந்த களஞ்சியசாலைகளுக்கு சீல்



(கொழும்பு)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 45 ஆயிரம் தொன் நெல் மூடைகளை பதுக்கிவைத்திருந்த களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளால் நேற்று செவ்வாய்க்கிழமை கந்தளாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்போது, மூன்று நெல் களஞ்சியசாலைகளில் 45 ஆயிரம் தொன் நெல்மூடைகள் பதுக்கிவைக்கப்பட்டிருந்த நிலையில், மூன்று நெல் களஞ்சியசாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் கே.டி வசந்தன் தெரிவித்தார். சுற்றி வளைப்பு நடவடிக்கைகளில் பொலிஸாரும் ஈடுபட்டதோடு, பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# பதவி விலகினார் விசேட வைத்திய நிபுணர்



(கொழும்பு)

சுகாதார அமைச்சின் கொரோனா தொடர்பான தொழில்நுட்ப குழுவிலிருந்து விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம விலகியுள்ளார்.

அவரது இராஜினாமா பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றை எதிர்கொள்வதற்கான நெறிமுறைகளை உருவாக்குவதில் வைத்தியர் ஆனந்த முக்கிய பங்கு வகித்தார் என்றும் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொடர்பான தொழில்நுட்ப குழு எடுத்த முடிவுகளுடன் கருத்து வேறுபாடு காரணமாக அக்குழுவில் இருந்து ஆனந்த விஜேவிக்ரம விலகியுள்ளார்.

இருப்பினும் அவர் தனது முடிவை மறுபரிசீலனை செய்து மீண்டும் எங்களுடன் இணைந்துகொள்ள வேண்டும் என ஹேமந்த ஹேரத் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-5)

## தகனத்தில் தாமதம்

# கொவிட் சடலங்களுடன் ஏனைய சடலங்களையும் வைக்கும் நிலை




(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ள குளிரூட்டியில் (கூலர்) கொரோனாவால் உயிரிழந்த சடலங்களுடன் ஏனைய சடலங்களையும் ஒன்றாக வைத்திருக்க வேண்டிய அபாயகரமான நிலைமை காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

இதன் காரணமாக சுகாதாரப் பணியாளர்கள், மரண விசாரணை அதிகாரிகள், பொலிஸார் மற்றும் மரணமடைவோரின் உறவுகள் பாதிப்பை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தினரை வினவிய போது வைத்தியசாலையில் சடலங்களை பாதுகாப்பாக வைப்பதற்கு ஒரே ஓர் குளிரூட்டி வசதி மாத்திரமே காணப்படுகிறது.

தற்போது மாவட்டத்தில் கொரோனா சடலங்களை உடனடியாக மின் தகனம் செய்ய முடியாத நிலை காணப்படுவதனால் வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ள குளிரூட்டியில் உரிய முறையில் பொதி செய்யப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்படுகிறது.

கொரோனா சடலங்கள் பெருமளவில் தேங்கும் நிலைமை காணப்படுவதால் உறவினர்கள் சடலங்களை வேறு மாவட்டங்களில் மின் தகனம் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

சகல வைத்தியசாலைகளிலும் தற்போது இவ்வாறான நெருக்கடி நிலைமை காணப்படுவதாக மேலும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் சுட்டிக்காட்டியிருந்தனர். (4-7-30)




## நாதஸ்வர மேதை சிவசிதம்பரநாதனின் இழப்பு கலையுலகிற்குப் பேரிழப்பு

### ஆறு.திருமுருகன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

நாதஸ்வர மேதை சிதம்பரநாதனின் இழப்பு கலையுலகிற்கு பேரிழப்பு என கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாதசுரபி கலாபூஷணம் நாதஸ்வர மேதை சிதம்பரநாதன் காலமான செய்தியறிந்து மிகுந்த கவலையடைகின்றேன்.

அளவெட்டியில் பிறந்து தனது சிறு வயதிலேயே நாதஸ்வரக் கலையை நல்ல முறையில் கற்றுத்தேறி கலைப்பணி ஆற்றியவர்.

இலங்கையிலுள்ள பல திருக்கோயில் மகோற்சவங்களை தனது வித்துவச் சிறப்பால் சிறப்பித்தவர். கம்பன் விழா அரங்குகளில் இவரது நாதஸ்வரக் கச்சேரி தவறாமல் இடம் பெறுவது வழக்கம்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி பல கௌரவப் பட்டங்களை பல நிறுவனங்கள் வழங்கிப் பெருமைப்படுத்தின. இசை நுணுக்கங்களை நன்கு அறிந்த இக்கலைஞனின் இழப்பு கலையுலகிற்கு பேரிழப்பு எனலாம்.

நாதஸ்வரக் கலைஞர்களுக்கு முன்மாதிரியாகவும் நல்லொழுக்க சீலராகவும் விளங்கிய நாதஸ்வர மேதையின் ஆத்மா ஆடல்வல்லான் திருவடியின் கீழ் ஆறுதல் பெறபிரார்த்திப்போமாக எனத் தெரிவித்தார். (4-7)



பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கையில் நிர்வாகிகள் சுன்னாகம்சூறாவத்தை ஜொனியன்ஸ் சனசமூக நிலையத்தினூடாக கொரோனா நோயினால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கு சுமார் 1340ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

## வடக்கில் இதுவரை 448 கொவிட் மரணங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் செப்டெம்பர் மாதத்தின் முதல் 6 நாட்களில் 75 பேர் கொவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் வவுனியா மாவட்டத்தில் 29 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 27 பேரும் கடந்த 6 நாட்களில் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்குமாகாணத்தில்நேற்று முன்தினம் திங்கட் கிழமை 11 பேர் கொவிட்- 19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் 2020 மார்ச் தொடக்கம் நேற்றுவரை வடக்கு மாகாணத்தில் 488 பேர் கொவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். (4-7-18-33)

# விஷப் பாம்புகளின் அச்சுறுத்தலில் இணுவில் காரைக்கால் மக்கள்

(யாழ்ப்பாணம்)

இணுவில் காரைக்கால் சிவன் கோவிலை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் விஷப் பாம்புகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாக நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சி.கௌசல்யா தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், சிலரின் வீடுகள் மற்றும் விவசாய காணிகளுக்குள் வரும் நாக பாம்பு உள்ளிட்ட விஷப் பாம்புகளை உயிருடன் பிடித்து வந்து சிவன் கோவில்களை அண்டிய பகுதிகளில் விட்டு செல்கின்றனர். இந்துக்கள் மத்தியில் நாக வழிபாட்டு முறை உள்ளமையால் , நாக பாம்பை அடித்துக் கொல்வதற்கு பலருக்கும் தயக்கம். அதனால் அதனை உயிருடன் பிடித்து வந்து ஆலயச் சூழலில் விட்டு செல் கின்றனர்.

புராதன ஆலயமான காரைக்கால் சிவன் கோவிலைச் சுற்றிபல பாம்பு புற்றுகள் உள்ளன. அந்த புற்றுக்களுக்குள் தற்போது நாகபாம்பு உள்ளிட்ட பாம்புகள் குடி கொண்டுள்ளன, இந்நிலையில் அவை தற்போது, ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள்ளும், விவசாய காணிகளுக்குள்ளும் படையெடுக்கின்றன.

அதனால் அப்பகுதி மக்கள் பாம்புகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து, அவர்கள் மூலம் வனவிலங்கு பாதுகாப்பு துறையின் உதவியை பெற்றுள்ளோம். அதன்மூலம் ஆலயச்சூழலில் நாகபாம்புகள் உள்ளிட்ட விஷப் பாம்புகளை கண்ணுற்றால் சமூக பொறுப்புடன் 077 950 7269 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேவேளை ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் பாம்புகள் உள்ளிட்ட விஷஜந்துக்களை கொண்டுவந்து உயிருடன் விடுவதனை தடை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம் எனவும் தெரிவித்தார். (4-7-18-33)


## விண்ணப்ப இறுதித் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பாவனையிலுள்ள தனியார் காணிகள் காரணமாக இதுவரை மீளக்குடியமராத குடும்பங்களின் விபரங்களையும், பலாலி விமான நிலைய காணி சுவீகரிப்புக்குள்ளான காணி உரிமையாளர்களின் விபரங்களை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக குறிப்பிடப் பட்ட நடைமுறைகளுக்கமைவாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 15.09. 2021 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்காக யாழ். மாவட்ட செயலக www.jaffna.dist.gov.lk எனும் இணையத்தளத்தையும் பார்வையிட முடியும் என யாழ். மாவட்ட செயலர் அறிவித்துள்ளார். (4-6)

# வெளிவந்தது ‘கலைமுகம்’




(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்படும் “கலைமுகம்” கலை இலக்கிய சமூக இதழின் ஏப்ரல்- செப்டெம்பர் 2021 காலப்பகுதிக்குரிய 72 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநராகவும், “கலைமுகம்” இதழின் பிரதம ஆசிரியராகவும் இருந்து கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அமரத்துவமடைந்த கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகளாரின் நினைவுகளின் சில பக்கங்களைச் சுமந்து வருகின்ற இந்த இதழில்,

❖ சமூக அசைவியக்கமும் சமூக ஊடகங்களும்

❖ நாராயணபுரம்: வடமராட்சியின் மண்வாசனை வீசும் நாவல்

❖ தற்காலத் தமிழகச் சிறுகதைகள்

❖ புலம்பெயர்ந்தவர்கள்

❖ நினைவுச் சின்னம் ஒரு வரலாற்றுத் தொடுகல்

❖ கனடா மண்ணில் ‘தமிழ் இருக்கை’ மற்றும் கவிதைகள், சிறுகதைகள், நூல் மதிப்பீடுகள், அஞ்சலிகள் போன்ற பல்வேறு விடயங்கள் இடம்பெற்றுள்ளன. (4-7)



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கொடியிறக்க உற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

(படம்:ரவிசாந், சிவசாந்தன்)

# எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி அவசியம்

## விசேட மருத்துவர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**இரண்டாவது சினோபார்ம் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டுள்ள நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பைசர், அஸ்ட்ரா ஜெனேகா அல்லது மொடர்னா தடுப்பூசிகளை வழங்குவது அவசியம் என்று விசேட மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அதேவேளை, 20 - 30 வயதிற்கு இடைப்பட்டவர்களுக்கு பைசர் தடுப்பூசியை செலுத்துவது முறையற்றதெனவும் அது விஞ்ஞான பூர்வ தரவுகளை மீறும் செயற்பாடு என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

தடுப்பூசி வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுப்பவர்கள் அதற்காக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் நிபுணர்கள் குழு, உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றின் அனுமதியுடன் முன்வைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுவது அவசியமாகும் என்றும் மேற்படி சங்கம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளது.

மேற்படி செயற்பாடுகள் தொடர்பான அறிவை கொண்டுள்ள மருத்துவ குழுவினரால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை முறையாக செயற்படுத்தாமையே 60 வயதுக்கு மேற்பட்டோரிடையே அதிகளவில் மரணம் ஏற்படுவதற்குக் காரணம் என்றும் அந்த சங்கம் தெரிவிக்கின்றது. (ரி-5)

# பிரதமர் மகிந்த இத்தாலி பயணம்

(கொழும்பு)

இத்தாலியில் உள்ள பொலப்னா பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அடுத்த வார இறுதியில் இத்தாலிக்கு செல்லவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் ஜிஎல். பீரிஸ் தெரிவித்தார்.

ஐரோப்பாவின் மிக உயர்ந்த சர்வதேச மாநாடுகளில் ஒன்றான இந்த மாநாட்டின் முதல் அமர்வில் பங்கேற்க பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

பிரதமர் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்ற தலைவர் உட்பட அரச தலைவர்களுக்கிடையில் நடைபெறவுள்ள கலந்துரையாடல்களில், இலங்கையின் யதார்த்த நிலையை பிரதமரால் ஐரோப்பாவுக்கு தெளிவுபடுத்த முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ரி-5)



# கர்ப்பிணித் தாய்மார்கள் தாமதிக்காது தடுப்பூசி செலுத்திக் கொள்ளுங்கள்

## சுகாதார அமைச்சு ஆலோசனை

(கொழும்பு)

கர்ப்பிணிதாய்மார்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகின்றமை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் கர்ப்பிணிதாய்மார்கள்உடனடியாககொரோனாத் தடுப்பூசி களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என குடும்பநல சுகாதார பிரிவின்பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் சித்ர மாலிடி சில்வா தெரிவித்தார்.

கர்ப்பிணிதாயொருவருக்கு எப்படியாவது கொரோனாத் தொற்று ஏற்படுமாயின், சாதாரண நபரொருவர் தொற்றுக்குள்ளாவது போலன்றி அதிக சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கர்ப்பிணி தாய்மார்கள் நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கப்படுவது முக்கியம் என கூறிய விசேட வைத்திய நிபுணர் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். (ரி-5)



நுவரெலியா மாவட்டத்தில் மிக வேகமாக பரவிவரும் கோவிட் தொற்றினை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் ஒரு சில பொது சுகாதார வைத்திய அதிகார பிரிவுகளில் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.


# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம் அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் - வகை II
2. யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் - வகை II
3. யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் - வகை II

**தகைமைகள்:**

- வகை II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் II, தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- இலங்கை அதிபர் சேவை தரம் II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் தரம் III அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களும் உதவி, பிரதி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும் இந்நிபந்தனைக்கு உட்படமாட்டார்கள்.

**குறிப்பு:**

- மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2021.09.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் **"வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **" அதிபர் பதவிக்கான விண்ணப்பம்-2021"** எனக் குறிப்பிடவும்

**திரு. முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன்**
**யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்,**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(C-2623)

# மன்னாரில்

## வெளிக்கள குடும்பநல உத்தியோகத்தர்களினால் மேலதிக நேர கொடுப்பனவு கோரி போராட்டம்

(மன்னார்)

**மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வெளிக்கள குடும்ப நல உத்தியோகத்தர்கள் நேற்றைய தினம் காலை இரண்டு மணி நேரம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**



காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை குறித்த போராட்டம் இடம்பெற்றது. நீண்ட காலமாக வழங்கப்படாமல் உள்ள மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்க கோரி குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போதைய கொரோனா காலப்பகுதியில் தமது சாதாரண கடமையை விட தற்போது அதிக நேரம் கடமையாற்றுவதாகவும், குறிப்பாக அன்டிஜன், பீ.சி.ஆர் பரிசோதனைகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டவர்களை பராமரித்தல் உள்ளிட்ட மேலதிக கடமைகளை மேற்கொண்டாலும், இதுவரை தமக்கான மேலதிக நேர கொடுப்பனவை வழங்கவில்லை என கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட வெளிக்கள குடும்ப நல உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். தமது மேலதிக நேர கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை அடங்கிய மகஜர் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பிவைக்கும் வகையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளித்தனர்.

இதன் போது மகஜரை பெற்றுக் கொண்ட மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் கருத்து தெரிவிக்கையில், மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதோடு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த மகஜரை வட மாகாண ஆளுநருக்கு உடனடியாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதாகவும் தெரிவித்தார். (7-4-6-285)

## ‘கை கொடுப்போம்’ தொனிப்பொருளில் பளை நகரப்பகுதியில் தொற்று நீக்கம்



(தர்மபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா மரணங்களும், கொரோனா தொற்றும் அதிகரித்து வருகின்ற நிலையில் கிளிநொச்சிமாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட நகரப்பகுதி மற்றும் பளை பொலிஸ் நிலையம், பஸ் தரிப்பிடம், பொதுச்சந்தை, வியாபார நிலையங்கள், பாடசாலை ஆகிய இடங்களுக்கு பளை இளைஞர் அணியினரால் நேற்று முன்தினம் தொற்று நீக்கிகள் விசிறப்பட்டது.

சுகாதார பணியாளர்கள் ஆளணிபற்றாக்குறையால் வரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்ற நிலையில் பளை இளைஞர் அணியானது "கைகொடுப்போம்" என்ற தொனிப்பொருளில் கிளிநொச்சிமாவட்ட ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் பச்சிலைப் பள்ளியின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனின் உதவியுடன் இச்செயற்பாடானது முன்னெடுக்கப்பட்டது.

மேலும் பல்வேறுபட்ட கொவிட் 19 ஒழிப்பு சம் பந்தமான செயற்பாடுகளில் ஈடுபட்டு பளை இளைஞர் அணி சுகாதார துறைக்கு கைகொடுக்க உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.(7-4-6-316)

## இலங்கைக்கு அழைத்துச் செல்வதாக ஏமாற்றிய பெண் உட்பட நால்வர் கைது

(மன்னார்)

தனுஷ்கோடி கடல் வழியாக நாட்டுப்படகில் இலங்கை யுவதியை சட்டவிரோதமாக இலங்கைக்கு அழைத்துச் செல்வதாக ஏமாற்றிய பெண் உட்பட 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பெண் தனுஷ்கோடியை சேர்ந்தவரிடம் இலங்கைக்கு செல்ல படகு கட்டணமாக ரூபாய் 30 ஆயிரம் கொடுத்துள்ளார். கடந்த சனிக்கிழமை மாலை பாம்பன் சின்ன பாலம் கடற்கரை வர சொல்லியதால் அங்கு சென்ற பெண் கடலில் தயாராக இருந்த ஒரு படகில் புறப்பட்டு இலங்கை சென்றுள்ளார். படகோட்டிகள் நீண்ட நேரம் கடலில் சுற்றிவிட்டு நள்ளிரவு 12 மணியளவில் இலங்கை வந்து விட்டதாக தெரிவித்து தனுஷ்கோடி கடல் பகுதியில் அமைந்துள்ள ஒன்றாம் மணல் திட்டில் இறக்கி விட்டு சென்றுள்ளனர்.

இலங்கைப்பெண்ணை கைது செய்த மெரைன் பொலிஸார் இலங்கைக்கு சட்டவிரோ தமாக அழைத்துச் செல்வதாக கூறி பணம் பெற்றுக் கொண்டு ஏமாற்றிய மீனவர் படகில் ஏற்றி சென்றவர்கள் சின்ன பாலத்தை சேர்ந்த மீனவ பெண் மற்றும் இலங்கை பெண் உட்பட ஐந்து பேரை கைது செய்த மெரைன் பொலிஸார் நேற்றுக்காலை இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். வழக்கு விசாரணைக்கு பின்னர் இலங்கை பெண் உட்பட 5 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.(7-4-6-285)

## கொவிட் தொற்றினால் உயிரிழந்தவர்களில் 90 வீதமானோர் தடுப்பூசி பெறாதவர்களே

### கிளி.சுகாதார வைத்திய அதிகாரி சரவணபவன்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கொவிட் தொற்றினால் உயிரிழந்த 44 பேரில் 90 வீதமானவர்கள் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்களும், ஒருதடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களுமாவர் என்பதால் தடுப்பூசிகளை முன்வந்து பெற்றுக்கொள்ளுங்கள் என கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி சரவணபவன் தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2 வாரங்களாக தொற்றாளர் எண்ணிக்கை மாவட்டத்தில் அதிகமாக காணப்பட்டது. தினமும் 500 தொடக்கம் 600 க்குமேற்பட்டவர்களிற்கு பரிசோதிக்கப்பட்டு 250 பேர் வரை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டார்கள். இந்த வாரம் தொற்று எண்ணிக்கை படிப்படியாக குறைய ஆரம்பித்துள்ளது.

நாடு முடக்கப்பட்டிருந்தாலும், மக்களிற்கு வெளியே செல்வதற்கு சில அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது. அதனை மக்கள் துஷ்பிரயோகம் செய்வதாக உணர முடிகின்றது. வழங்கப்படும் அனுமதியை பயன்படுத்திதேவையற்று நடமாடுகின்றனர். மாஸ்க் அணிந்திருந்தாலும் இடைவெளியை பேணாததை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான நடைமுறை தொடருமாயின் எதிர்வரும் நாட்களில் மீண்டும் தொற்று அதிகரிப்பதற்கான ஆபத்து உள்ளது.

அதேவேளை வீடுகளில் தேவையற்ற நிழ்வுகளையும் தவிர்க்க வேண்டும். பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உள்ளிட்டவை அயல் வீடுகளுடன் இணைந்து நடார்த்துவதை அவதானிக்க முடிகின்றது. அவற்றை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தொற்று காணப்படுபவர்களில் அநேகமாக வீடுகளில் வைத்தே சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களிற்கான நோய் அதிகரிப்பு காணப்படுமிடத்து வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து வைத்தியசாலையில் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

நேற்று முன்தினம் முதல் 2ம் கட்ட தடுப்பூசிஏற்றும் பணிகள் 16 தடுப்பூசி செலுத்தும் நிலையங்களில் இடம்பெற்று வருகின்றது. அதேவேளை அடுத்த வாரம் தொடக்கம் வீடுகள் தோறும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசி போடுவதில் பின்னிற்கின்றார்கள். அவர்கள் அதனை தவிர்த்துக்கொள்ள விரும்புகின்றார்கள். அவ்வாறு உள்ளவர்கள் வீடுகளிற்கு வரும் பொழுது தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (7-4-6-100-316)

## அழிக்கப்பட்ட மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்கள் நடப்பட வேண்டும்

### பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கொக்காவில் பகுதியில் பெருமளவில் கிரவல் அகழ்வு நடைபெற்றதன் காரணமாக இப்பகுதியில் அழிக்கப்பட்ட மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை நடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இனிவருங்காலம் மழை காலம் என்பதன் காரணமாக இம்மழையினை பயன்படுத்தி மரக்கன்றுகள் நடுகை செய்வதற்கான முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய், கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் மரங்கள் அழிக்கப்பட்டு மணல், கிரவல் அகழ்வுகள் நடைபெற்ற பகுதிகளில் மரக்கன்றுகள் நடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தின் கனகராயன் ஆறு, பேராறு பகுதிகளில் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு மணல் அகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுவதாக பொது அமைப்புகளினால் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-350)

# உலகில் முதல் முறையாக குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தியது கியூபா

(ஹவானா)

**உலகிலேயே முதல் முறையாக 2-வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடும் பணி கியூபாவில் தொடங்கியுள்ளது.**

அப்டாலா மற்றும் சோபிரனா ஆகிய இரு தடுப்பூசிகளும் மருத்துவ பரிசோதனை முடிவடைந்தையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் 12-வயதுக்கு மேற்பட்ட சிறார்களுக்கு போடும் பணியை கியூபா தொடங்கியது.

இந் நிலையில் நேற்று முன்தினம் முதல் 2 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் தடுப்பூசிஏற்றும் பணி தொடங்கியுள்ளது.

கியூபாவின் மத்திய மாகாணமான சியன் பியூகோஸ் பகுதியில் குழந்தைகளுக்கு தடுப்பூசி விநியோகிக்கும் பணியை தொடங்கியுள்ளது. சீனா, ஐக்கிய அரபு அமீரகம், வெனிசூலா ஆகிய நாடுகள் குழந்தை களுக்கு தடுப்பூசி போட திட்டமிட்டுள்ளதாக அறிவித்திருந்தாலும், கியூபாவில் முதன் முறையாக போடப்பட்டுள்ளது.

கியூபாவில் போடப்பட்டுள்ள தடுப்பூசிக்கு இன்னும் உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7-4)

# இஸ்ரேலில் 4 ஆவது டோஸ் தடுப்பூசி செலுத்த பரிசீலனை

(ஜெருசலேம்)

டெல்டா வகை கொரோனாவிற்கு எதிராக போராடுவதற்காக, இஸ்ரேல் அரசு பூஸ்டர் டோஸ் தடுப்பூசிகளை செலுத்த முடிவு செய்துள்ளது.

இஸ்ரேல் நாடு ஏற்கனவே 2 கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு பூஸ்டர் டோஸ் வழங்க வயது வரம்பைக் குறைத்துள்ளது.

பைசர் கொரோனாத் தடுப்பூசியை பூஸ்டர் டோசாக வழங்க முடிவு செய்த இஸ்ரேல், முதலில் வயதானோருக்கு தடுப்பூசியைச் செலுத்தியது. படிப்படியாக வயது வரம்பைக் குறைத்து வந்த அரசு, தற்போது 12 வயதிற்கு மேற்பட்டவர்கள் யாராக இருப்பினும் பூஸ்டர்டோஸ் செலுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மேலும் கொரோனாவால் பாதிப்படையாமல் இருக்க 4ஆவது டோஸ் தடுப்பூசியையும் செலுத்த பரிசீலித்து வருவதாக அந்நாட்டு மருத்துவத்துறை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்

அடுத்தடுத்த அலைகள் ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 4ஆவது டோஸ் தடுப்பூசியை செலுத்தலாம் என்று திட்டமிட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி அந்நாட்டில் 25 இலட்சம் பேர் தங்கள் 3ஆவது டோஸ் தடுப்பூசியை எடுத்துக் கொண்டுள்ளனர். (7-4)

# பயணக்கட்டுப்பாட்டை நீக்கிய கனடா

(ஒட்டோவா)

முழுமையாகத் தடுப்பூசி போட்ட சர்வதேச பயணிகளுக்கான பயணக் கட்டுப்பாடுகளை கனடா நீக்குகிறது. தளர்த்தப்பட்ட பயணக்கட்டுப்பாட்டு நடைமுறை நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.

ஹெல்த் கனடாவால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றுக் கொண்டவர்கள் சுற்றுலா உள்ளிட்ட அத்தியாவசியமற்ற பயணங்களுக்காகவும் நேற்று முதல் அனுமதிக்கப்படுவார்கள்.

அத்துடன், கனடாவுக்கு வரும் பயணிகளுக்காக 14 நாட்கள் தனிமைப்படுத்தல் நடைமுறையும் நீக்கப்படுகிறது.

கனடா பைசர்-பயோடெக், மொடர்னா, ஜோன்சன் & ஜோன்சன் மற்றும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளை அங்கீகரித்துள்ளது. இந்தத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களே கட்டுப்பாட்டுத் தளர்வின் கீழ் கனடா பயணம் செய்ய தகுதிபெற்றவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கனடாவுக்கு பயணம் செய்யும் 5 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் புறப்படுவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும். அன்டிஜன் முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சில வெளி நாட்டவர்கள் வருகைக்குப் பின்னரும் எழுமாற்றான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (7-4)

# ஆப்கானில் கட்டுப்பாடுகளுடன் திறக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்

(காபூல்)

உள்நாட்டுப் போருக்குப் பின் ஆப்கானிஸ்தான் மெல்ல மெல்ல இயல்புநிலைக்கு திரும்புவதைத் தொடர்ந்து, அங்கு பல்கலைக்கழகங்கள் கடும் கட்டுப்பாடுகளுடன் திறக்கப்பட்டுள்ளன.



அதில், மாணவிகளுக்கு பெண் ஆசிரியர்களைக் கொண்டு வகுப்புகள் நடத்த வேண்டும் அல்லது நல்ல குணமுள்ள முதிய வயது ஆண் ஆசிரியர்களைக் கொண்டே வகுப்புகள் எடுக்க வேண்டும். ஆண்-பெண் மாணவர்களுக்கு தனித்தனியாக நுழைவுவாயில் மற்றும் வெளியேறும் பகுதிகளை அமைக்க வேண்டும்.

வகுப்புகள் முடிவடையும் போது மாணவர்கள் வெளியேறிய ஐந்து நிமிடங்களுக்குப் பிறகே மாணவிகளை வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும். மாணவிகள் நிகாப், புர்கா உடைகள் கட்டாயம் அணிய வேண்டும். என்பன உள்ளிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், ஆண்-பெண் மாணவர்களுக்கு நடுவில் திரை அமைத்து வகுப்புகள் நடப்பதுபோன்ற புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.(7-4)

# சிறையிலிருந்து தப்பிய பாலஸ்தீன கைதிகள்

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் மிகவும் பாதுகாப்பு வாய்ந்த சிறைகளில் ஒன்றான கில்போவா சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாலஸ்தீனியர்கள் 6 பேர் சிறை அறையில் உள்ள கழிவறை வழியாக சுரங்கம் தோண்டி தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தப்பியோடிய கைதிகளை பிடிப்பதற்கான தீவிர தேடுதல் வேட்டையில் இஸ்ரேல் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்ரேலால் சிறைபிடிக்கப்பட்டுள்ள பாலஸ்தீனியர்களை ஹீரோக்களாக கொண்டாடும் பாலஸ்தீன மக்கள், சிறையில் இருந்து அவர்கள் தப்பியோடியதை சமூக வலைதளங்களில் கொண்டாடி வருகின்றனர். (7-4)

# ஹெய்ட்டி நிலநடுக்கம் பலி 2,248 ஆக உயர்வு

(போர்ட்- அவு-பிரின்ஸ்)

ஹெயிட்டியில் கடந்த மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி உயிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2,248 ஆக உயர்ந்துள்ளது.

அந்நாட்டு சிவில் பாதுகாப்பு நிறுவனம் கடந்த திங்களன்று மீட்புப் பணிகளை முடித்த பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'கடந்த ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2,248 பேர் உயிரிழந்துள்ளனர். 12,763 பேர் காயமடைந்துள்ளனர், மேலும் 329 பேர் காணாமல் போயுள்ளனர்' எனக் கூறப்பட்டுள்ளது.

ஹெய்ட்டியை ஓகஸ்ட் 14 ஆம் திகதி 7.2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் தாக்கியதையடுத்து சிறிது நேரத்தில் வெப்ப மண்டல புயல் வீசியது.

அப்போதிலிருந்து, 900 நிலநடுக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அவற்றில் 400 நில நடுக்கங்கள் ரிக்டர் அளவுகோலில் 3 இற்கும் மேல் பதிவாகியுள்ளன.

இந்த பேரழிவால் 53,000 இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்தும், 83,000 இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்தும் குறைந்தது 25,000 பேர் இதுவரை வீடு திரும்ப முடியாத நிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# கொரோனாவை பரப்பியவருக்கு 5 ஆண்டுகள் சிறை

(ஹனோய்)


வியட்நாமில் கடுமையான கொரோனா தனிமைப்படுத்தல் விதிகளை மீறியதற்காகவும், பொதுமக்களுக்கு வைரஸை பரப்பியதற்காகவும் 28 வயது நபர் ஒருவருக்கு ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர் அரசின் கொரோனாக் கட்டுப்பாடு விதிகளை மீறி ஹோ சி மின் நகரத்தில் இருந்து தனது சொந்த மாகாணமான கா மாவுக்கு தனிமைப்படுத்துதல் விதிகளை மீறி பயணம் செய்துள்ளார்.லீவான் ட்ரையின் இந்த பொறுப்பற்ற தன்மை காரணமாக சுமார் 8 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டதாகவும் ஒருவர் உயிரிழந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

குறித்த குற்றம் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை கைது செய்த பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். நீதிபதி அவருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (7-4)

# மக்களின் உரிமைகளை நசுக்குவதில் அரசாங்கம் குறியாக உள்ளது

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



(கொழும்பு)

**உலக நாடுகள் கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும் நிலையில் இலங்கை அரசாங்கம் மக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளை நசுக்குவதில் அதிக கவனம் செலுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.**

ஜனாதிபதியின் தற்போதைய நடவடிக்கை எதிர்காலத்தில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பிழையான உதாரணமாகி விடும் என அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் அவசரகால சட்ட ஒழுங்குவிதிகள் நிறைவேற்றும் வகையில் இடம் பெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக நாடுகள் கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும் நிலையில் இலங்கை அரசாங்கம் மக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளை நசுக் குவதில் அதிக கவனம் செலுத்துவதாகவும் குற்றம் சாட்டினார்.

இதேவேளை ஜனாதிபதியினால் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டத்தின் மூலம் கொரோனாத் தொற்றினால் ஒருநாளைக்கு உயிரிழக்கும் 200 பேர் என்ற எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடிந்ததா என்றும் எரான் விக்ரமரத்ன கேள்வியெழுப்பினார்.

அரசாங்கம் தனது குறுகிய நோக்கத்திற்காக சுயாதீன நிறுவனங்களை பலவீனப்படுத்தி, நிபுணர் ஆலோசனையைப் புறக்கணித்து, சம்பந்தப்பட்ட அனுபவம் அல்லது புரிதல் இல்லாத இராணுவத்திற்கு அதிகாரத்தை வழங்குவதன் மூலம் ஆபத்தான முன்னுதாரணத்தை காட்டுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (நி-5)

## மிலிந்தவின் நியமனச்சான்றினை டெல்லி நிராகரிக்கவில்லை

### இந்திய உயர் ஸ்தானிகராலயம்

(கொழும்பு)

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக கடமைகளை பொறுப்பேற்றுள்ள மிலிந்த மொரகொடவின் நியமன சான்றிதழை டெல்லி நிராகரிக்க வில்லை என இந்திய உயர் ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

டெல்லியில் கடமைகளை பொறுப்பேற்றிருக்கும் இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராக நியமனம்பெற்றுள்ள அசோக மிலிந்த மொரகொடவின் நியமன சான்று குறித்து வெளியாகியுள்ள பல்வேறு ஊடக அறிக்கைகள் தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளவரின் நியமன சான்றிதழை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வில்லை என்பது தொடர்பான செய்திகளில் உண்மையில்லை என குறிப்பிட்டுள்ளது. (நி-5)

## ஒரு றியால் 63 ரூபாய்களை தாண்டியது

(கொழும்பு)

நேற்று முன்தின நிலவரப்படி ஒரு கட்டார் றியால், இலங்கைப் பெறுமதியில் 63.00 ரூபாயைத் தாண்டியுள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன. கடந்த ஓகஸ்ட் மாதம் 15 ம் திகதி ஒரு றியால் 55 ரூபாய்களாக காணப்பட்ட அதே வேளை 15 நாட்களில் 8 ரூபாயால் அதிகரித்து 63 ரூபாவாகப் பதிவாகியுள்ளது..

மேலும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கைப் பெறுமதி வரலாற்றில் இல்லாவகையில் 200 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பித்தக்கது.(நி-5)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2399

**ஜெயந்தி**

எங்க மதுரைக்கு 'துரு' பஸ் இருக்கா?



இல்லைங்க எல்லாரே பெயின்ட் அடிச்ச பஸ்தான்...

**கோகிலா**

மைன்ட் வாய்ஸ்- இவ எதுக்கு கார குழம்பு டம்ளர் ல ஊத்திக் கொடுக்கிறா புரியலையே



மனைவி- எங்க நான் வச்ச சுக்கு காப்பி எப்படி இருக்கு......(ஆத்தி ஜெஸ்ட் மிஸ் டா)

**சாமந்தி**

ஆறு மாசத்துக்கு கேஸ் வாங்க வேண்டியதில்லை



**குமுதன்**

அக்கா உங்க வீட்ல வாஷிங் மெஷின் இருக்கா..?



இப்போ ஓயிஸ் போயிருக்கும்மா ஆறு மணிக்கு வந்துரும்.

**யனோஸ்**

கனவன்களை திருப்பி அடிப்பதில்இந்திய பெண்கள் 3 வது இடம்|ஐக்கிய நாடுகள் ஆய்வறிக்கை



மூனாவது இடத்துல இருக்கிற நமக்கே இந்த அடினா..முதல் இடத்துல இருக்குறவன் உசுரோடஇருப்பான்னு நெனைக்கிற...?

**சுலக்ஷ்**

காதலித்துப் பார் நீ அழகாவது உனக்கு மட்டுமே தெரியும்



பின்பு நீ அசிங்கப்படுவது ஊருக்கே தெரியும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஒரு வாரத்தில் சுங்கத்துக்கு 9 பில்லியன் ரூபாய் வருமானம்

(கொழும்பு)

கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் 3 ஆம் திகதிவரையிலான காலப்பகுதியில், இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் இறக்குமதி வரிவருமானமாக 9.34 பில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் சுங்கத் திணைக்களத்தால் அனுமதியளிக்கப்பட்ட ஏற்றுமதிகளின் பெறுமதி 46.43 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது.

சுங்கத்திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சுதத் டி சில்வா வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டில் கொவிட் பரவல் அதிகரித்துள்ளதால் சுங்கத்தினரின் கடமைகளில் கணிசமானளவு பாதிப்பு ஏற்பட்டுள்ள போதிலும் சுங்கத் திணைக்களம் கடுமையான சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றி, தொடர்ந்தும் தமது சேவைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளார். (நி-5)

# பிரான்ஸ் - இலங்கைக்கிடையில் நேரடி விமான சேவை

(கொழும்பு)

பிரான்ஸ் தலைநகர் பாரிசுக்கும் இலங்கைக்கும் இடையிலான நேரடி விமான சேவை ஆரம்பமாகவுள்ளது.ஸ்ரீ லங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் அடுத்த மாதம் இரண்டாம் திகதி பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து பிரான்சின் சார்ல்ஸ் டீ கோல் விமானநிலையம் வரை நேரடி சேவையாக ஆரம்பிக்கவுள்ளது. புதன், வெள்ளிசனி ஆகிய தினங்களில் இந்த விமான சேவைகள் இடம் பெறவுள்ளன. சேவையில் ஈடுபடவுள்ள A330-300 aircraft என்ற விமான த்தில் 297 பேர் பயணிக்கக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பெரிய வெங்காயத்திற்கு 40 ரூபாய் இறக்குமதி வரி

(கொழும்பு)

இறக்குமதியாகும் பெரிய வெங்காயம் கிலோ வொன்றுக்கு 40 ரூபாய் இறக்குமதி வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என விவ சாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அதற்கமைய இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்து க்கு விதிக்கப்பட்டுள்ள இந்த வரி நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)



இலங்கை அரசை குற்றவியல் நீதி மன்றத்திற்கு பாரப்படுத்துங்கள் என்ற கோரிக்கையுடன் ஐ.நா நோக்கிதொடர்ந்து பயணிக்கும் நீதிக்கான பயணம் ஐந்தாவது நாளாக கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பாரிஸ் Phalsbourg நகர சபையுடன் நிறைவு பெற்றது.

# பாவனைக்கு உதவாத பெருந்தொகை சீனி மீட்பு

(கொழும்பு)

வத்தளை பொலிஸ் பிரிவில் விசேட அதிரடிப் படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் பாவனைக்கு உதவாத 6,25,000 கிலோ கிராம் சீனி மற்றும் சீனி பாணி உள்ளிட்டவற்றைஅனுமதியின்றி களஞ்சியப்படுத்தி விற்பனை செய்த சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இவ்வாறுகைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கம்பஹாநுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். 25 வயதுடைய மாபோல பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பொய்

நமக்கெல்லாம் நல்லா பரிச்சயமான ஒரு விடயம் பற்றி இன்றைக்கு சிறிது யோசிக்கலாம் என்று ஒரு ஆசை! அதாவது பொய் சொல்கிறதைப் பற்றி! ஒருத்தர் வந்தார். "சேர்" பொய்யிலே மூன்று வகை இருக்கிறது! என்றார். "என்னென்ன?" என்று கேட்டேன்

ஒன்று– பொய், இரண்டாவது– புளுகு, மூன்றாவது– புள்ளி விபரம், என்றார். எனக்கு அதிர்ச்சி! "என்னது புள்ளி விபரத்தையும் அதனோடு சேர்த்தீட்டீங்கள்!" என்றேன். "அதற்கு காரணம் நீங்கள் தான்! ஏன்னென்றால் 'இன்று ஒரு தகவலிலே' அப்பப்போது சில புள்ளி விபரம் எல்லாம் சொல்லிறீங்களே!" என்றார்.

நான் 'கம்' என்று வாயை மூடிக்கொண்டேன். அதற்கு மேலே அவரிடம் பேச்சுக் கொடுக்கவில்லை. அவர் சும்மா "கிண்டல்" செய்வதற்காக அப்படி சொல்லியிருக்கிறார். அதை யாரும் 'உண்மை' என்று எடுத்துக்கொள்ள வேண்டாம்.

பொய்யிலே எத்தனை ரகம் வேண்டும் என்றாலும் இருந்திட்டு போகட்டும். ஆனால் இந்த காலத்திலே எது பொய்... எது உண்மை என்று கண்டுபிடிக்கிறதே பெரும்பாடாக இருக்கிறது. அதை முதலிலே கண்டுபிடித்தாலே அதற்குப்பிறகு அதை ரகம் பிரிக்கறதுக்கு! வெளி உலகத்திலேயே இந்த நிலைமை என்றால் தப்பு செய்து விட்டு உள்ளே போறாங்களே... அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கும்?

குற்றவாளிகளிடமிருந்து உண்மையை வரவழைக்கிறதிற்கு என்னென்னமோ செய்து தான் பார்க்கிறார்கள்! இருந்தாலும் அவ்வளவு பேருக்கும் "தண்ணிக்காட்டிட்டு" தப்பிக்கிறவர்கள் எத்தனை பேர்? பொய் சொல்கிறதை கண்டுப்பிடிக்கிறதிற்கே புதிய ஒரு கருவி வந்திருக்கிறது. அதனுடைய விலை 75,000 ரூபாயாம்! 'Polygraph' என்று பெயர். சாதாரணமாக ஒருத்தன் ஒரு குற்றத்தை செய்து விட்டு மாட்டிக்கொண்டால் அவனிடமிருந்து உண்மையை வரவழைக்கிறதிற்கு என்ன செய்வார்கள் தெரியுமா?

மிரட்டி உருட்டி பார்க்கிறது, கஷ்டப்படுத்தி பார்க்கிறது, (சித்திரவதை) மயக்கமருந்து கொடுத்துப்பார்க்கிறது இது மாதிரி செய்து உண்மையை வரவழைக்கிற பழக்கம் ரொம்ப காலமாகவே இருக்கிறது. இருந் தாலும் அதற்கெல்லாம் சட்டபூர்வமான அங்கீகாரம் கிடையாதாம். ஏன்னென்றால் ஒரு நிரபராதி கூட கஷ்டத்திற்குப் பயந்துகொண்டு நான் தான் திருடினேன் என்று சொல்லி விடலாம்லே!

அவரே ஒத்துக்கொண்டார் அதனாலே அவர் தான் திருடன் என்று நாம் முடிவு செய்ய முடியுமா? அதனாலே அதற்கெல்லாம் சட்ட ரீதியான அங்கீகாரம் இல்லை! ஆனால் இந்த 'Polygraph' என்கிற இந்த அறிவியல் முறைக்கு அறிவியல் ரீதியான அங்கீகாரம் உண்டு. ஒருத்தரை விசாரணை செய்கிறார்கள் அவர் அதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். அந்த சமயத்திலே அவர் உடம்பிலே வெவ்வெறு இடங்களிலே என்னென்ன மாறுதல் ஏற்படுவது என்கிறதை இந்த கருவி காட்டிக் கொடுத்துவிடும்.

ஒரு நிஜமான திருடன் நான் அந்த 10, 000 ரூபாயை எடுக்க வில்லை என்று சாதிக்கிறான். "நீ அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டிருந்தை இன்னொருத்தர் பார்த்துக் கொண்டிருந்தார் ஜன்னல் வழியாக!" என்று சொல்கிறார்கள் விசாரணை செய்கிறவர்கள். இதைக் கேட்டவுடனே அந்த திருடனுக்கு உள்ளுக்குள்ளே ஒரு அதிர்ச்சி! தன்னுடைய உணர்ச்சிகளை மறைக்க முயற்சி செய்கிறான் முடியவில்லை! தடுமாறுகிறான்.

அந்த சமயத்திலே அவனுடைய இரத்த அழுத்தம் வித்தியாசப்படுகிறது, நாடித்துடிப்பு வித்தியாசப்படுகிறது, சுவாச நிலை வித்தியாசப்படுகிறது இதை அந்த கருவி மூலமாக கண்டுப்பிடிக்கலாம். உடனே 'சரி' ஆசாமி பொய்யை மறைக்க முடியாமல் தடுமாறுகிறான் என்கின்ற முடிவுக்கு வந்து விடலாம்.

இந்த முறையைப் பயன்படுத்தி பெறப்படுகிற சாட்சியத்தை கூட இன்னமும் நீதிமன்றம் முழுமையாக ஏத்துக்கொள்ளவில்லையாம்! தவறுதலாக நிரபராதிகள் தண்டிக்கப்பட்டுடக்கூடாது என்பதிலே அவ்வளவு எச்சரிக்கை! இருந்தாலும் ஒருத்தரை விசாரிக்கும் போது ஆரம்ப நிலையிலே இந்த கருவி ரொம்ப உபயோகமாக இருக்கும் என்று சொல்கிறார்கள்! எவ்வளவு தான் இருக்கட்டும்.

உடம்பை சிறிது கூட அலட்டிக்காமல் பொய்யையே நிஜம் மாதிரி சொல்கிற கில்லாடிகள் சில பேர் உண்டு. அவர்களை எல்லாம் என்ன செய்கிறது என்று தெரியவில்லை! இப்போது எல்லாம் பொய் சொல்கிறதிலேயே போட்டி கூட வைக்கிறார்கள் சேர். யார் மிகப் பெரிய பொய்யாக சொல்கிறாரோ அவருக்குப் பரிசு! மூன்று பேர் இந்தப் போட்டியிலே கலந்துக்கொண்டார்கள்.

முதல் ஆள் வந்தான்: "நான் நேற்று ராத்திரி வானத்தை அப்படியே கையாலே பிடித்து வில்லு மாதிரி வளைத்திட்டேன்!" என்றான்.

இரண்டாவது ஆள் வந்தான்: "நான் நேற்று ராத்திரி மணலை அள்ளி அப்படியே ஒரு நீளமான கயிறாக திரிச்சிட்டேன்!" என்றான்.

மூன்றாவது ஆள் வந்தான்: "நீங்கள் இரண்டு பேரும் சொல்கிறதை நான் அப்படியே நம்புகிறேன். ஏன்னென்றால் நீங்கள் இரண்டும் பேரும் நேற்று அப்படி செய்துக்கொண்டிருந்ததை நான் என் இரண்டு கண்ணாலே பார்த்தேன்!" என்றான்.

மூன்றாவது ஆளுக்குத் தான் பரிசு கொடுத்தார்களாம்...




# சிங்கம்- அசிங்கம்



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அதனுடைய மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டது.

அதனால் அது மிகவும் கவலையுடன் காணப்பட்டது. சிங்கத்திடம் நரி, புலி, கரடி, சிறுத்தை போன்ற மிருகங்கள் வந்து துக்கம் விசாரித்து சென்றன.

சிங்கம் முன்போல் காட்டில் அதிகமாக நடமாடாமல் தன்னுடைய உணவிற்காக மட்டும் வெளியே செல்லும். மற்றபடி தன்னுடைய குகையிலேயே இருக்கும். எப்பொழுதும் அது தன்னுடைய மனைவியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது. இப்படியே நாட்கள் பல ஆகிவிட்டன.

சிங்கத்தின் நடமாட்டம் அதிகமாக இல்லாததால் ஒருநாள் புலியும், நரியும் சிங்கத்தை காணச்சென்றன. சிங்கம் மிகவும் சோர்ந்து போய் வேட்டைக்குகூடச்செல்லாமல் கண்ணீருடன் காணப்பட்டது.

புலியும், நரியும் சிங்கத்திடம், "இன்னும் அழுது கொண்டிருந்தால் என்ன பயன் அதனால் மனதை திடப்படுத்திக் கொண்டு வாழ பழகி கொள்ள வேண்டும்" என்றன.

அதற்கு சிங்கம் என்னுடைய மனைவி இல்லாமல்என்னுடையபலம் அனைத்தையும் நான் இழந்து விட்டேன். என்னுடைய மனைவி தான் நான் வேட்டைக்குச்செல்லும் போது உற்சாகமும் ஊக்கமும்கொடுத்து வழியனுப்புவாள். அதனால் அவள் இல்லாமல் என்னால் வேட்டைக்குசெல்ல மனமே இல்லை. சாப்பிடவும் பிடிக்க வில்லை என்றது. புலியும் நரியும் சிங்கத்திடம் சிறிது நேரம் பேசி விட்டு குகையை விட்டு வெளியே வந்து தங்களுடைய இருப்பிடம் நோக்கிச்சென்றன.

(தொடரும்)

# மகாபாரதம்

177



மனிதன் எப்போதும் ஒரே குணமுடையவனாக இருக்கமாட்டான். நல்லவன் கெட்டவன் ஆகலாம், கெட்டவன் நல்லவனாகலாம். நண்பன் பகைவன் ஆகலாம், பகைவன் நண்பன் ஆகலாம். இது உலக இயல்பு.

ஆகவே, அரசன் எப்போதும் யாரிடமும் நம்பிக்கை வைக்கக்கூடாது. முழுமையாக ஒருவனையே நம்பினால் அறம், பொருள், இன்பம் அனைத்தும்நாசமாகும்.

ஆனால் நம்பிக்கை கொள்ளாமலும் இருக்கக்கூடாது. அவநம்பிக்கையும் ஆபத்தைத் தரும்.

எனவே நண்பர்கள் இயல்பை அறிந்து அவர்களின் ஆலோசனையைப் பெற வேண்டும். நல்ல தோற்றமும் அழகும் கம்பீரக் குரலும் பொறுமையும்நல் ஒழுக்கமும்உடையவன் முதலமைச்சனாகும் தகுதியுள்ளவன் ஆவான்.

தருமா, அத்தகைய குணங்கள்உள்ளவனையே நீ முதலமைச்சனாகக் கொள்ள வேண்டும். நல்லறிவு படைத்தவர்களையும் நினைவாற்றல் மிக்கவர்களையும்நல்ல இயல்பு உள்ளவர்களையும் தனக்குரிய மரியாதை கிடைக்கா விட்டாலும் மனவருத்தம் அடையாதவர்களையும் ஆகிய மேலோர்களைநீ உனது அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

புகழ் நோக்கம்உடையவனும் நீதியை விரும்புபவனும் காமம், அச்சம், சினம் இல்லாதவனும் அதிகம் பேசாதவனும், தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளாதவனும் ஆகிய ஒருவனிடம் அமைச்சுப் பதவியைத் தர வேண்டும்.

அறம், பொருள் சிதறாமல் பாதுகாக்கும் உத்தமனை நீ தேர்ந்தெடுத்து உன் அருகில் அவனைஇருக்கச்செய்ய வேண்டும். ஒரு தந்தை மகனிடம் காட்டும் அன்பை நீ அவனிடம் செலுத்த வேண்டும்.

ஆனாலும் தருமா ஒரு காரியத்திற்கு இரண்டு அல்லது மூவரை நியமிக்கக்கூடாது. அப்படி நியமித்தால் அவர்களுக்குள் பொறாமை தோன்றும். ஒற்றுமையுடன் செயற்பட மாட்டார்கள். அதனால்காரியம்நிறைவேறாது.

மரணத்திற்கு அஞ்சுவது போல் சுற்றத்தாரைக் கண்டு பயப்பட வேண்டும். அரசனின் பெருமை கண்டு சுற்றம் மகிழாது. சுற்றத்தாரால் துன்பமும் உண்டு. இன்பமும் உண்டு.

(தொடரும்)

மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கு நன்றி செலுத்தமாட்டான்.
– முகமது நபிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனாத் தொற்றால் இறந்தவர்களைத் தகனம் செய்தல்...

கொரோனாத் தொற்றால் ஏற்படும் மரணங்களைப் பார்க்கும்போது இதயம் கருகிப் போகிறது.

அந்தளவுக்கு நாள்தோறும் கொரோனாத் தொற்றால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்து வருகின்றன.

இதுதவிர, கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் உடலைத் தகனம் செய்வதில் பெரும் இடர்பாடு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடலங்கள் தகனத்துக்காகக் காத்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் மின் தகனம் செய்ய முடியாத கட்டத்தில், அநுராதபுரத்தில் மின் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

என்ன செய்வது கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் உடலை வீட்டில் வைத்து இறுதிக்கிரியை செய்து வழியனுப்ப முடியாத அவல நிலையில், சரி ஏதோ விதிப் பயன் என நினைந்து சம்பந்தப்பட்டவரின் உடலைத் தகனம் செய்யும்போது உற்ற உறவினர் ஒரு சிலரேனும் தகனம் நடக்கின்ற இடத்தில் நின்று அதனை நிறைவேற்றி அஸ்தியை எடுத்து ஆகவேண்டியதைப் பார்க்கலாமென்றால், அதற்கும் விதி விடுவதாக இல்லை.

ஆம், அநுராதபுரத்தில் மின் தகனம்செய்வதாக இருந்தால் அங்கு உற்றவர்கள் செல்வது என்பது சாத்தியப்படப் போவதில்லை.

தவிர, கொரோனாத் தொற்றால் ஒருவர் இறந்திருந்தால் அவரின் குடும்ப உறுப்பினர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுகின்ற சூழமைவும் உண்டு.

நிலைமை இதுவாக இருக்கையில், அநுராதபுரத்தில் மின் தகனம் செய்யும்போது உற்றார் எவரும் உடன் இருக்க முடியாத பரிதாப நிலை ஏற்படவே செய்யும்.

இதற்கு மேலாக, உரியவரின் அஸ்தி மாறுபடாமல் உரியவாறு கிடைக்குமென்ற நம்பிக்கையும் அற்றுப் போகும்போது, அதனால் ஏற்படுகின்ற தாக்கம் ஒருபோதும் ஆற்றுப்பட முடியாததாகவே இருக்கும்.

எனவே கொரோனா காரணமாக வடபுலத்தில் இறந்தவர்களின் உடல்களை வடபுலத்துக்கு வெளியில் மின் தகனம் செய்ய வேண்டிய தேவை ஏற்படுமாயின், அதுவிடயத்தில் இறந்தவரின் நெருங்கிய உறவுகளின் சம்மதத்தைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்ற விடயத்தை மனிதநேயத்தின் பேரால் இங்கு வலியுறுத்த விரும்புகின்றோம்.

அதேநேரம் கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் உடல்களைப் பாதுகாப்பான முறையில் எரியூட்டக்கூடிய சாத்தியங்கள் உண்டா? என்பது பற்றி ஆராய்வது நெருக்கடியான நிலைமைகளைச் சமாளிக்க உதவும் என்பதால், சம்பந்தப்பட்டவர்கள் அது தொடர்பிலும் தமது பார்வையை செலுத்த வேண்டும்.

என்ன செய்வது இப்படியொரு அவல நிலை ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் மனிதநேயம் உயிர்ப்போடு இருக்க வேண்டும்என்பது தான் எம் தாழ்மையான கோரிக்கை.

# நாட்டில் எந்தவொரு தேவையும் இல்லாமல் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது

## பாராளுமன்றத்தில் கஜேந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் ஒன்று நாட்டில் எந்தத்தேவையும் இல்லாமல் நிறைவேற்றப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் மக்களிடம் இருந்து வரும் எதிர்ப்பை சமாளிப்பதற்காக இப்போது அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்றது.

ஆனால் இந்த முடிவு அரசாங்கத்தை அதள பாதாளத்திற்குள் கொண்டு செல்லும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 30 ஆண்டுகளாக இந்த அவசரகாலச் சட்டம் தமிழ் மக்களை வேட்டையாடியது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

# கண்ணிவெடிகளை தடைசெய்யும் சட்டம்

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

கண்ணிவெடிகளை தடைசெய்யும் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிதற்காகவும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1997 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற ஆட்களை அழிக்கும் நிலக் கண்ணிவெடிகளைத் தடை செய்தல் தொடர்பான இராஜதந்திர மாநாட்டில், ஆட்களை அழிக்கும் நிலக் கண்ணிவெடிகளைப் பாவனை செய்தல், இருப்பில் வைத்திருத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் இடமாற்றம் செய்தல் போன்றவற்றை தடை செய்தல் மற்றும் அவற்றை அழித்தல் தொடர்பான சமவாயத்தின் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி இலங்கையில் குறித்த உடன்படிக்கை அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக சட்டத்தை வகுப்பதற்கான பொறுப்பு இலங்கை அரசாங்கத்திற்குண்டு. அதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிதற்காகவும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-3)

# யாழ். சாவகச்சேரியில் 27 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ். சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் நேற்று காலை முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 27 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுமார் 114 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் 27 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மருத்துவ நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவர்களுடன் தொடர்பினை பேணியவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ம-3)

# கொரோனா தடுப்பூசியை கட்டாயமாக்க முடியாது

## சபையில் அத்துரலிய ரத்தின தேரர்


(கொழும்பு)

எவரேனும் ஒருவர் கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதைக் கட்டாயமாக்க முடியாது. அவ்வாறு தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்கு செல்வதை கட்டுப்படுத்த மட்டுமே முடியும்.

அதேவேளை கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளின் உள்நாட்டு மருத்துவத்தையும் மேற்கத்தைய மருத்துவத்தையும் இணைத்து வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் சுகாதார அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

'இந்த செய்தியைக் கேட்டு குருவும் மற்ற சீடர்களும் விரைந்து சென்று, அவனை ஆசிரமத்திற்குத் தூக்கி வந்து சிகிச்சை அளித்தார்கள். சிறிது நேரத்தில் அவனுக்கு நினைவு திரும்பியது. அப்போது சீடர்களுள் ஒருவன் அவனைப் பார்த்து, ஆமாம், மதயானை வருகிறது என்பதைக் கேட்டும் நீ ஏன் ஓடவில்லை?" என்று கேட்டான்.

அதற்கு அந்தச் சீடன், நாராயணனே மனிதன் முதலிய எல்லா உயிர்களுமாக இருக்கிறார் என்று அல்லவா குருநாதர் நமக்கு உபதேசித்தார்! ஆகவே யானை-நாராயணன் வந்தபோது, அந்த இடத்தை விட்டு ஓடாமல் இருந்துவிட்டேன்" என்றான்.

இதைக் கேட்ட குரு, மகனே, யானை-நாராயணன்தான் வந்தான், அது உண்மை. ஆனால் யானைப்பாக-நாராயணன் உன்னை எச்சரித்தானே! எல்லோரும் நாராயணன் என்றால் நீ ஏன் அவனது வார்த்தைகளை நம்பவில்லை? யானைப்பாக-நாராயணனின் வார்த்தைகளையும் நீ மதித்திருக்க வேண்டும் அல்லவா?" என்று கேட்டார். (எல்லோரும் சிரித்தனர்) (தொடரும்)

# மாகாண சபைத் தேர்தல்கள்

30

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



அட்டவணை 19B

வட மேல் மாகாண சபைத் தேர்தல் -2009

கட்சிகள் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | JVP | மொத்தம் |
| குருநாகல் | 24 | 9 | 1 | 34 |
| புத்தளம் | 11 | 5 | - | 16 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 37 | 14 | 1 | 52 |

ஐமசுமு- ஐக்கியமக்கள்சுதந்திரக்கூட்டணி, ஐதேக- ஐக்கியதேசியக்கட்சி, JVP-மக்கள் விடுதலை முன்னணி

### மேல் மாகாணத்தின் மாகாணசபைத் தேர்தல் 2009

2009.01.29 ஆம் திகதியன்று மேல் மாகாண சபை கலைக்கப்பட்டமையால் தேர்தல்கள் ஆணையாளரினால் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்கள் சார்பாக வேட்புமனுக்கள் கோரும் அறிவித்தல்கள் 2009.02.05 ஆம் திகதிய 1587/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டன.

2009.02.19 ஆம் திகதி முதல் 2009.02.26 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையிலான வேட்பு மனுக் காலக்கெடுவிற்குள் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத் துறை ஆகிய மாவட்டங்களுக்கு 19 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 45 வேட்புமனுக்களும் சுயேச்சைக் குழுக்களிடமிருந்து 29 வேட்புமனுக்களுமாக மொத்தம் 74 வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டன.

அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட 7 வேட்பு மனுக்களும் சுயேச்சைக் குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 6 வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

அதற்கிணங்க கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய ஒவ்வொரு மாவட்டத்திற்குமென முறையே 17,11,10 என்ற வகையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட 38 வேட்பு மனுக்களின் கீழ் 1474 வேட்பாளர்களும் கொழும்புக்கு 13, கம்பஹாவிற்கு 4 மற்றும் களுத்துறைக்கு 6 என்ற வகையில் 23 சுயேச்சைக் குழுக்கள் சார்பாக 904 வேட்பாளர்களுமாக மொத்தம் 2378 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 102 ஆகும். 2009ம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் திகதிமேல் மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது.

### வாக்காளர் இடாப்பு

2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களில், மத்திய , வடமேல் மற்றும் மேல் மாகாணங்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களின் போது 2007 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் அடிப்படையிலும், ஊவா மற்றும் தென் மாகாணங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களின் போது 2008 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் அடிப்படையிலும் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வேட்பு மனு அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினத்தன்று நடைமுறையிலிருந்த வாக்காளர் இடாப்பு, குறித்த வாக்கெடுப்புக்கு செல்லுபடியான இடாப்பாக கருதப்படல் வேண்டுமென சட்டத்தின் 5 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளது.

அச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்கிணங்க 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் அப்போதைக்கு வலுவில் இருக்கும் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவும் மற்றும் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமும் இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வாக்கெடுப்புப் பிரிவொன்றாகவும் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டமொன்றாகவும் கருதப்படல்வேண்டும்.

அதேபோல் இச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற வாக்கெடுப்பொன்றின் போது எவரேனுமொருவர் வாக்களிப்பதற்கான உரித்துடையவராகின்றாரா? இல்லையா? என உறுதிப்படுத்திக் கொள்ளும் பணிக்காக மேற்குறித்த 5 ஆம் பிரிவின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பு முடிவான சான்றாதல் வேண்டுமென 6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிணங்க மத்திய , வடமேல் மற்றும் மேல் மாகாணங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களின் போது 2008 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட முன்னர் வேட்பு மனு அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டமையால், 2007 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பை அடிப்படையாக வைத்து வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டன.

ஆனால் அதன்பின் நடந்த ஊவா மற்றும் தென் மாகாணங்கள் தொடர்பாக மாகாண சபைகள் தேர்தல்களுக்காக வேட்பு மனு அறிவித்தல் வெளியிடப்பட்ட போது 2008 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டிருந்தமையால் அவ் விடாப்பை அடிப்படையாக வைத்து தேர்தல்கள் நடத்தப்பட்டன.

### வாக்காளர் அட்டைகளை கணனியூடாகத் தயாரிக்கும் நடவடிக்கை

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை கணனியூடாகத் தயாரிக்கும் நடவடிக்கை முதன்முதலாக 2006 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபை வாக்கெடுப்பின் போது பொறளை வாக்கெடுப்புப் பிரிவு தவிர்ந்த கொழும்பு மாநகர சபையின் ஏனைய வாக்கெடுப்புப் பிரிவுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2009 ஆண்டு நடத்தப்பட்ட மாகாண சபை வாக்கெடுப்பில் மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களும் ஊவா, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களுக்குரிய அனைத்து மாவட்டங்களுக்குமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கணனியின் துணையோடு அச்சிடப்பட்டன.

களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம் கையெழுத்தில் தயாரிக்கப்படுவதற்காக அச்சிடப்பட்ட அட்டைகள் விநியோகிக்கப்பட்டன.

### வாக்காளர் இடாப்பில் இருந்த பன்மைப் பதிவுகளை இல்லாமல் செய்தல்

2007 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பினைத் தயாரிக்கின்ற போது தேசிய அடையாள அட்டை இலக்கமும் வாக்காளர் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டதன் பெறுபேறாக கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் பாரியளவில் பன்மைப் பதிவுகள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்தது. இதில் வெளிப்படையாக எடுத்துக் காட்டப்படக்கூடிய ஒரு நிலை கொழும்பு மாவட்டத்தில் காணப்பட்டது.

அது தொடர்பாக உடனடியாகச் செயல்பட்டு பன்மைப் பதிவுடையவர்களை பெயர் ரீதியாக இனங்காணவும் ஒவ்வொரு முகவரிக்கும் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர் பதிவுச் சட்டத்தின் 12(7) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலொன்று அனுப்பப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவ்வறித்தலுக்கிணங்க எவரேனும் ஒருவர் ஒரு முகவரியில் மாத்திரம் வாக்கினைப் பிரயோகிப்பதை இயலச்செய்யும் பொருட்டு, ஏனைய முகவரிகளிலிருந்து பெயரை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 12(7) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலுக்கு பதிலளிக்காத வாக்காளர்களின் பன்மைப்பதிவு தெரிவத்தாட்சி அலுவலரின் தற்றுணிபுக்கிணங்க, ஒரு முகவரியிலிருந்து பெயரை நீக்கியதன் மூலம் திருத்தம் செய்யப்பட்டது.

எவ்வாறாயினும் பன்மைப் பதிவு வாக்காளர்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களால் உரிய சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வழங்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எவரேனுமொரு வாக்காளர் பல முகவரிகளின் கீழ் வாக்கினைப் பிரயோகிக்க முயன்றால் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பான பிரத்தியேக அறிவுறுத்தல்கள் சிரேஸ்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டதோடு, அத்தகைய நபர்களை பன்முறை வாக்களிப்புக்கு எத்தனித்த சட்ட முரணான செயலுக்கான குற்றவாளிகளாகக் கருதி சட்ட நடவடிக்கை எடுக்கவும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

(தொடரும்...)

## 40 கர்ப்பவதி...

குடும்பநல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் சமுதாய வைத்தியர் சித்ரமாலி டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை 5,500 கர்ப்பவதித் தாய்மார்களுக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 184 கோவிட்...

ழுந்துள்ளவர்களில் 97 ஆண்களும் 87 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்தவகையில், 30 வயதுக்குட்பட்டவர்களில் 03 ஆண்களும் ஒரு பெண்ணுமாக 04 பேரும் 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 26 ஆண்களும் 20 பெண்களுமாக 46 பேரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 68 ஆண்களும் 66 பெண்களுமாக 134 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 10,504 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வெளிப்படுத்தப்...

வாக்குகளும் எதிராக 44 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதேவேளை நேற்று முன்தினம் அவசரகால சட்டவிதிமுறைகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 132 வாக்குகளும் எதிராக 51 வாக்குகளும் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சபைக்கு வரு...

அந்தத் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் பிரதமர் அலுவலக பிரதானி யோஷித்த ராஜபக்ஷவை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என அறிய முடிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசேட கோரிக்கையையடுத்தே அஜித் நிவார்ட் கப்ரால் தனது அமைச்சுப் பொறுப்பையும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜிநாமா செய்யவுள்ளார்.

எவ்வாறாயினும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித்த ராஜபக்ஷ, தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் வருவதற்கு ஆளும் கட்சிக்குள் ஒரு தரப்பால் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவின் வருகைக்காகத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை இராஜிநாமா செய்த ஜயந்த கெட்டகொடவுக்கு மீண்டும் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை வழங்க வேண்டும் என்று குறித்த தரப்பால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 4 சிசுக்களையும்...

மனையில் பிரசவத்தின்போது உயிரிழந்துள்ளன.

அம்பாறை விஜிதபுராவைச் சேர்ந்த அந்தப் பெண், ஐந்து மாத கர்ப்பவதியாக இருந்தபோது கோவிட் - 19 தொற்றுக் காரணமாக அம்பாறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

வைரஸிலிருந்து மீண்ட பிறகு அவர் மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

எனினும், திடீரென உடல்நலக் குறைவு காரணமாக மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இறந்த குழந்தைகளைப் பெற்றெடுத்தார்.

அவருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் மற்றும் இரண்டு பெண் குழந்தைகள் உயிரிழந்த நிலையில் பிறந்ததாகவும் தொற்றுக் காரணமாக குழந்தைகள் இறந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

## ஊரடங்கை...

துள்ளதுடன், கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் உள்ளிட்ட மிக முக்கிய துறைகளும் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளன.

இதனை அடிப்படையாகக் கொண்டு ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகின்றது.

ஊரடங்கைத் தளர்த்தி அத்தியாவசிய துறைகள் உள்ளிட்ட முக்கிய துறைகளை சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுடன் மீளத் தொடங்கவும் கூடிய விரைவில் பாடசாலைகளைத் திறக்கவும் அரசு தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

அதேபோல் ஊரடங்கு அமுலாக்கம் நாட்டில் கொரோனா மரண வீதத்தை குறைத்துள்ளமையினையும் கருத்தில் கொண்டு அரசு இந்தத் தீர்மானத்தை ஆராய்வதாகக் கூறப்படுகின்றது. (ம-3)

## குடும்பப் பெண்...

பாணத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயான கிறிஸ்ரியன் கொன்சராணி (வயது-58) என்பவரே இவ்வாறு உயிரிழுந்தவராவார்.

குறித்த குடும்பப் பெண் கடன் காரணமாக கடந்த மாதம் வீட்டை விட்டு வெளியேறி 3 நாட்களாக காணாமல்போயுள்ளார்.

பின்னர் கடந்த 24ஆம் திகதி நாவற்குழிப் பகுதியில் தனக்குத்தானே தீ மூட்டிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## 9 பேரின்...

பப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சிசிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் நடராசா, மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் ஆகியோர் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளனர்.

முன்னதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி இணங்க மறுத்தது) மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியன கூட்டாக ஒரு கடிதமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு கடிதமும் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 16 பேர்...

வடக்கில் உள்ள மாவட்டம் ஒன்றில் பதிவாகிய அதிகபட்ச கோவிட் மரணங்கள் இதுவாகும்.

இந்நிலையில் மரணித்த 16 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வவுனியாவில் மேலும் 178 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 178 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,250,299)

# கிளிநொச்சியில் உயிரிழந்த ஒருவருக்கு கொரோனா

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உயிரிழந்த 81 வயதுடைய ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபருக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் உடலை மின் தகனம் செய்ய சுகாதாரத் தரப்பினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ம-3)

# மக்களை அடக்கவே அவசரகாலச் சட்டம்

### சபையில் பொன்சேகா

(கொழும்பு)

மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் மக்களை அடக்குவதற்கே இந்த அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அரிசி, சீனிக்கு அவசரகாலச் சட்டம் கொண்டு வருகின்றீர்கள் என்றால் யுத்தம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்? என்று ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். (ம-3)

## 12 பேர்...

ளது.

அதன் அடிப்படையில், யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் மாவட்டச் செயலகம் ஆகியன இணைந்து வெளியிட்டுள்ள நாளாந்த அறிக்கையில் குறித்த விபரங்கள் வெளியாகியுள்ளன.

அதன் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் 02 பேர், நல்லூரில் 02 பேர், சண்டிலிப்பாயில் ஒருவர், உடுவிலில் ஒருவர், தெல்லிப்பழையில் ஒருவர், கோப்பாயில் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,உயிரிழந்த பெண் ஒருவருக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சியின் மட்டுவில் பகுதியில் உயிரிழந்த 65 வயதுப் பெண்ணுக்கும் அன்டிஜன் பரிசோதனை ஊடாக கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

தென்மராட்சி மந்துவில் மேற்கு பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை வீடுகளில் உயிரிழந்த இரண்டு பேரில் வயோதிப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மந்துவில் மேற்கு கிராமத்தில் வெவ்வேறு வீடுகளில் திடீரென உயிரிழந்த இருவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 96 வயது வயோதிப் பெண் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி கடந்த 21ஆம் திகதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் உயிரிழந்துள்ளார்.

கண்டி வீதி சாவச்சேரியைச் சேர்ந்த 72 வயதான ஓய்வுநிலை பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-3,18,30)

## நாட்டின் பிரபல...

கோத்தமிபிங்தணி ஆருடம் கூறியுள்ளார்.

சிங்கள இணையத்தள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

எனக்கு பேய் புகுந்துள்ளது, சாமி வந்துவிட்டதென எல்லாம் பலர் கூறுகின்றார்கள். அப்படியில்லை, எனக்குள் தோன்றும் விடயத்தைத்தான் நான் கூறுகின்றேன். நான் கூறுவதும் அவ்வாறே நடக்கும்.

அதற்கமைய இலங்கையில் பிரபலமான தலைவர் இன்னும் 2 மாதங்களுக்குள் உயிரிழப்பார். நான் பொறுப்புடன் தான் இதனைக் கூறுகிறேன். அவர் மக்களால் அதிகமாக நேசிக்கப்பட்ட ஒருவராவார். பல்வேறு விடயங்களை செய்த ஒருவராவார். யாராலும் எதிர்பார்க்க முடியாத ஒருவரே இறக்கவுள்ளார். அவர் சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒருவராவார். அதனை நான் தற்போதே பொறுப்புடன் கூறிக்கொள்ள எதிர்பார்க்கின்றேன்.

எனினும் அவற்றை நம்மால் தடுக்க முடியாது. அத்துடன் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் யாராலும் எதிர்பார்க்க முடியாத இரண்டு பிரபலங்கள் படுத்த படுக்கையாவர்.

கொடூர நோய் ஒன்றினால் பாதிக்கப்படுவார்கள். அவர்களில் ஒருவர் பேச்சாற்றல் கொண்ட பிரபல பிரபுக்களில் ஒருவராவார். அவர்கள் கொடூர நோய்களினால் பாதிக்கப்பட்டு மிக மோசமான நிலைக்குள்ளாகுவார்கள்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் யாரும் எதிர்பாராத பல அதிர்ச்சிச் சம்பவங்கள் இடம்பெறும். அத்துடன் பலரின் கனவுகள் கலைந்து போகும். 2050ஆம் ஆண்டிலும் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியும்.

எனினும் அவற்றை எல்லாம் நான் கூறப்போவதில்லை. நான் கூறுவது தீர்க்க தரிசனம் அல்ல. அவை எனக்கு கிடைத்த உலகளாவிய ஞானம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# நீண்டகாலத்திற்கு அவசரகால சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நோக்கம் இல்லை

## அமைச்சர் ரமேஷ் பத்திரண

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தினை நீண்ட காலத்திற்கு நடைமுறைப் படுத்தும் நோக்கம் அரசாங்கத் திடம் இல்லை என அமைச்ச ரவை இணைப்பேச்சாளர் அமை ச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித் துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங் களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்று ள்ளது. இதன்போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள் ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இதன் மூலம் நாட்டில் பேச்சு சுதந்திரம் மற்றும் ஆர்ப்பாட் டங்களை முன்னெடுப்பதற்கான சுதந்திரம் உள்ளிட்டவை முடக் கப்படமாட்டாது.

உணவு பொருட்கள் தொட ர்பில் எழுந்த சர்ச்சைக்கு தீர்வு காணும் நோக்கத்திலேயே அவ சரகால விதிமுறைகளைப் பிரகட னப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

# சேலை ஊஞ்சலில் கழுத்து இறுகி 11 வயது சிறுமி உயிரிழப்பு

(கொழும்பு)

சேலையில் கட்டப்பட்ட ஊஞ் சலில் விளையாடிக்கொண்டிரு ந்தபோது, 11 வயது சிறுமியொ ருவர் கழுத்து இறுகி பலியான சம்பவம் தெரணியகல- மாலி பொட பிரதேசத்தில் இடம்பெற் றுள்ளது.

கெரோனிடா திம்மினி என்ற 11 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி, தனது 9 மற் றும் 7 வயதான சகோதரர்களு டன் படுக்கையறையில் கட்டப் பட்ட ஊஞ்சலில் விளையாடியு ள்ளார். சிறுமியின் தந்தை மாலி பொட தோட்டத்துக்கு வேலைக் குச் சென்றிருந்ததுடன், அவரது தாய் சமையலில் ஈடுபட்டுக் கொண்டு இருந்துள்ளார்.

சமையல் வேலைகளை முடி த்த தாயார், சிறுவர்கள் விளை யாடிய அறைப் பக்கம் சென்ற போது, அறையின் கதவு உள்ளே தாழ்ப்பாள் இடப்பட்டிருந்ததை அவதானித்து, யன்னல் வழியே உள்ளே பார்த்துள்ளார்.

இதன்போது, தனது மகள் ஊஞ்சலில் இறுகிய நிலையில் இருந்ததைக் கண்டு, அயல வர்களின் உதவியுடன் சிறு மியை மீட்டு, தெரணியகல வைத்



தியசாலையில் அனுமதித்த போது சிறுமி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை தெரணியகல பொலிஸார் முன்னெடுத்து வருகி ன்றனர். (ம-03)

# கொரோனாவால் அரசுக்கு ரூபாய் 1,600 பில்லியன் வருமானம் இழப்பு - பசில்

உலகம் முழுவதும் கோவிட் பரவல் அதிகரித்து வருவதன் காரணமாக இவ்வருடம் இலங் கைக்கு 1,600 பில்லியன் ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டுள்ள தாக நிதி அமைச்சர் பசில் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப் பாட்டுச் சட்டம் தொடர்பில் நேற்று பாராளுமன்றில் கருத்து தெரி வித்த அவர், அரசாங்கத்துக்கு மறைமுக வரிகள் மூலமாக கிடைக்க வேண்டிய 1,600 பில் லியன் ரூபாய் வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளதாக தெரி வித்தார்.

அத்துடன், நாட்டின் பொருளா தாரத்தில் முக்கிய பங்குவகிக்கும், உள்நாட்டு இறைவரித் திணைக் களம், இலங்கை சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் என்பன தனிமைப்படுத்தல் ஊரடங்கு கார ணமாக மூடப்பட்டுள்ளதால் அத னூடாக கிடைக்க வேண்டிய வரு மானமும் இல்லாதுபோயுள்ள தாக அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீர்ப் பதற்காக கலுகை கடன் முறைமை தொடர்பில் மாத்திரம் அவதானம் செலுத்துவதாக நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# புதுக்குடியிருப்பில் இருவர் கொரோனாவால் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியி ருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியில் நேற்று இரண்டு பேர் கொரோனாத் தொற்றினால் மரணமடைந் துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர்கள் சுகவீனம் காரணமாக மாஞ்சோலை வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டி ருந்தனர். அவர்களிற்கு முன்னெ டுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

இதனையடுத்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று மரணமடைந் தனர். புதுக்குடியிருப்பு மேற்கு மற்றும் தேவிபுரம் பகுதியை சேர்ந்த 42, 84 வயதுடைய இருவரே இவ்வாறு மரணம டைந்துள்ளவர்களாவர். குறித்த நபர்களுக்கு வேறு எவ்வித நோய்களும் அற்ற நிலையிலே மரணமடைந்துள்ளதாக சுகா தார பிரிவினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-03,299)


# மரண அறிவித்தல்



திருமதி

## ஜெயபாக்கியலட்சுமி சிவசாமி

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

**பிறப்பு : 1940.06.30 இறப்பு : 2021.09.06**

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடத்தினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயபாக்கியலட்சுமி சிவசாமி நேற்று முன்தினம் (06.09.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலங்கைநாதர் - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடனசபாபதி, விஜயலட்சுமி, சுப்ரமணியம், தானியலட்சுமி மற்றும் அன்னபூரணம், குமாரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கண்மணி, கைலாசபிள்ளை, இராசலட்சுமி, பத்மநாதன், ஆறுமுகம் மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயராணி, கோகுலராணி, நித்தியராஜா, காலஞ்சென்ற அருந்தவராஜா, உதயராஜா, விக்னராஜா, கிருஷ்ணலிங்கம், தவபாலன், சிவபாலன், நடனரூபவதி, காந்தமலர், புஷ்பலட்சுமி, யதர்சினி, துஷ்யந்தன், டிலிப், டிலாணி, தாரணி, ரஜீதன், துவாரகன், பதீதன், அபர்ணா ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் மற்றும் சற்குணலிங்கம், வசந்தி, ஜெயக்குமார், பத்மஸ்ரீ, சுகுமார், மேகலா ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.09.2021) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

077 267 7392
077 844 8049
076 609 9339

(7868)

தகவல்: குமாரலிங்கம் (சகோதரன்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.